# இந்திய ஜனதிபதி பெப். 4-ல் யாழ். வருகிறார்

## மேயர் முயற்சி வெற்றி

(கொழும்பு)

இந்திய குடியரசுத் தலைவர் திரு. சஞ்சீவரெட்டி பெப்ரவரி 4 ம் திகதி யாழ்ப்பாணத்துக்கும் விஜயம் செய்வார். இதற்கான ஏற்பாடுகளை யாழ்ப்பாணம் மேயர் திரு. இ.ராஜா விசுவநாதன் செய்துள்ளார்.

இந்தியக் குடியரசுத்தலைவர் திரு. சஞ்சீவரெட்டி இலங்கைக் குடியரசுதின விழாவில் கலந்து கொள்வதற்காக இலங்கைவர விருப்பது தெரிந்ததே. அவரை யாழ்ப்பாணத்திற்கும் அழைத்து வரவேற்பளிக்க யாழ்ப்பாணம் மேயரும் மாநகரசபை உறுப்பினர்களும் விரும்பியதின் காரணமாக திரு. விசுவநாதன் எதிர்க்கட்சித்தலைவர் திரு, அமிர்தலிங்கம் மூலம் ஜனதிபதி திரு. ஜெயவர்த்தனவுடன் தொடர்பு கொண்டு முயற்சி எடுத்தார். அத்துடன் திரு. விசுவநாதன் நேற்றுக் கொழும்புக்கு வந்து கூட்டணித்தலைவர்களுடன் ஜனதிபதியை நேரில் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தியதில் இந்திய தலைவர் யாழ்ப்பாண

(8ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 1-00 ★

ஈழநாடு

THE EELANADU

மலர் 23 தை 9 றவி. அவ் 26 இதழ் 340

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 22-1-82

**அப்பளம் தயாரிப்பாளருக்கு..,**

நவீன இயந்திரங்கள் மூலம் அனுபவமிக்க தொழிலாளர்களால் தயாரிக்கப்பட்ட தரத்தில் உயர்ந்த

**"உழுந்து மாவு"**

**1 கிலோ--ரூபா 14/-க்கு**

மொத்தமாக எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

M. G. M. (சிவலிங்கப்புளியடி)
777, கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 611. 2034

# பாராளுமன்றத்தின் முன் மாணவர் ஆர்ப்பாட்டம்

## குதிரைப் படை பொலிசார் கும்பலைக் கலைத்தனர்

(கொழும்பு)

**கல்வி வெள்ளை அறிக்கையை எதிர்த்து நேற்றுநண்பகல் சுமார் 300 மாணவ மாணவிகள் பாராளுமன்றக் கட்டிடத்துக்குமுன் ஆர்ப்பாட்டம் செய்தனர் கலகம் அடக்கும்பொலிசார் குதிரைகளில்வந்து இவர்களைக் கலைத்தனர். சுமார் ஒருமணி நேரம் இந்தப் போராட்டம் நீடித்தது.**

கல்வி வெள்ளை அறிக்கை நேற்று பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது தெரிந்ததே காலையில் இருந்தே பாராளுமன்றக் கட்டிடப் பகுதியில் எவரும் கூட்டமாக நடமாடுவதை பொலிசார் தடுத்துவந்தனர். ஆர்ப்பாட்டங்கள் எதுவும் இடம்பெறுதவகையில் பொலிசார் மிகவும் கவனமாக இருந்துவந்தனர்.

**மதிய இடைவேளை நேரத்தில்**

சபைகூடி வழமையான அரசாங்க அலுவல்கள் முடிவுற்றதின்பின் 11-40 மணியளவில் கல்வி வெள்ளை அறிக்கையின் மீதான விவாதம் ஆரம்பமாயிற்று. மகாவலி அபிவிருத்தி காணி அமைச்சர் திரு. காமினி திஸநாயக்க பேசிக்கொண்டிருந்தவேளையில் சபை மதியபோசனத்துக்காக ஒத்திவைக்கப்பட்டது.

இவ்வேளையில் பாராளுமன்றக் கட்டிடத்துக்கு எதிரே உள்ள வீதிக்கும் கடற்கரைக்குமிடையில் சுமார் 300 இளம் மாணவர்களும், மாணவிகளும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருக்கக் காணப்பட்டனர். இவர்களில் சுமார் 50பிக்கு மாணவர்களும் இருந்தனர். இவர்கள் சுலோக அட்டைகளைத் தாங்கியவண்ணம் கோஷங்கள் எழுப்பிக்கொண்டிருந்தனர்.

**கலகம் அடக்கும்படை**

கலகம் அடக்கும் பொலி

(8ம் பக்கம் பார்க்க)

## இந்திராவை றெனி சந்திப்பார்

(கொழும்பு)

இந்தியக் குடியரசுத் தின வைபவங்களில் கலந்துகொள்வதற்காக நிதியமைச்சர் திரு. றெனி டிமெல் நேற்று முன் தினம் இந்தியா சென்றுள்ளார்,

இந்தியாவில் தங்கியிருக்கும் நாட்களில் திரு. மெல் 27ந் திகதி இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியைச் சந்தித்துப் பேச்சுநடத்துவார்.

இந்திய—இலங்கைப் பொருளாதார ஒப்பந்தம் குறித்து திரு.மெல் இந்திய நிதியமைச்சர் திரு. பிரணப் முகர்ஜியுடனும் பேச்சு நடத்துவார். (இ(

## பஸ்ஸில் கிடந்த சடலம்; விபத்து மரணம்

### பஸ். சாரதி நடத்துனர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். பஸ்நிலையத்தில், தெல்லிப்பழையைச் சேர்ந்த கதிரன் மாதன் மரணம் தொடர்பாகச் சந்தேகத்தின்பேரில் சாரதியான அளவெட்டியைச் சேர்ந்த சங்கரி குணராசா நடத்துநரான குருநகரைச் சேர்ந்த யேசுதாசன் ஆகியோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பதிகாரி திரு. யோகுகுமார், பொலிஸ் கான்ஸ்டபிள்களான தேவசகாயம், வடிவேல், தங்கராசா ஆகியோர் இவர்களைக் கைதுசெய்தனர்.

யாழ். நீதவான் திரு. ரி. ஜோகநாதன் முன்னிலையில் சந்தேகநபர்கள் இருவரும் ஆஜர்செய்யப்பட்டனர். நீதவான் சந்தேகநபர்களை அடுத்த மர்தம் 3ந் திகதி வரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

யாழ். நீதவான் திரு. ரி. ஜோகநாதன் பணிப்பின்பேரில் யாழ். மரண் விசாரணை அதிகாரி எஸ், எஸ். பிரான்சிஸ் நேற்று மரணவிசாரணை நடத்

[8ம் பக்கம் பார்க்க]

## மாணவர் நடத்திய ஆர்ப்பாட்டம் செயற்கையானது என கருதமுடியாது -- 'அமிர்'

(கொழும்பு)

''காலையில் மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தை நான் நேரில் பார்த்தேன். அவர்களை பொலிசார் துரத்தினார்கள். இது செயற்கையான ஆர்ப்பாட்டம் என்று சொல்ல முடியாது அவர்கள் பல்கலைக் கழக மாணவர்கள். விஷயம் தெரிந்தவர்கள்''

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று பாராளுமன்றத்தில் கல்வி வெள்ளை அறிக்கைமீது பேசும்போது கூறினர்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;

''கல்விவெள்ளை அறிக்கையின் பல அம்சங்கள் கண்டனத்திற்குரியதாகவும், பலவித நத்துக்களை கொடுக்கக்கூடியதாகவும், பெரும்பாலான மக்கள் மத்தியிலே ஒரு பயத்தை தோற்றுவிக்கக்கூடியதாகவும் இருக்கிறது.

''இந்த நாட்டின் கல்வி சீக்குலைவுக்கு ஆசிரியர் பற்றுர் குறை முக்கிய ஒரு காரணமாகும். பின்தங்கிய இடங்களிலுள்ள ஏராளமான பாடசாலைகளில் ஒரேஒரு ஆசிரியர் மட்

(8ம் பக்கம் பார்க்க)

**மங்களகரமான திறப்பு விழா!**

**கிறீன் பீல்ட் வீடியோ கிளப்**

**23-01-1982 சனிக்கிழமை பகல் 12 மணிக்கு இல: 26. நவீனசந்தை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் திறந்து வைக்கப்படும்**

உங்கள் இல்லங்களிலேயே வீடியோ மூலம் சிறந்த பல திரைப்படங்களை கண்டுகளித்து திருப்தியுறும் நல் நோக்குடன் ஆரம்பிக்கப்படவுள்ளது.

தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, சிங்களம் ஆகிய சிறந்த புதிய வெளியீடுகளை எமது வீடியோ நிலையத்தில் உடனுக்குடன் பெற்றுக்கொள்லாம். முதலில் வருபவருக்கு முதல் சேவை என்னும் அடிப்படையில் அங்கத்தினர் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

கண்ணியமான உபசரிப்பு, திருப்தியான சேவை, சகலவித உள்ளிட வெளியிட வீடியோ படப்பிடிப்புகள், வீடியோ ஒலிப்பதிவுகள், வீடியோ பழுது பார்த்தல் பொறுப்பேற்கப்படும்.

**'கிறீன்பீல்ட் வீடியோகிளப்'**

நம்பர்: 26, நவீனசந்தை (மேல்மாடி)
யாழ்ப்பாணம். 2021

### விலை கூட்டி விற்றார்களாம்

## யாழ். நகர் கடைகளில் 604 சீமெந்து பக்கட்டுக்கள் பறிமுதல்

(யாழ்ப்பாணம்]

கட்டுப்பாட்டு விலைக்கு மேல் சீமெந்து விற்பனை செய்ததாக யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியிலுள்ள மூன்று கடைகளிலிருந்து 604 சீமெந்து பக்கட்டுகளை விலைக்கட்டுப்பாட்டதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்

யாழ்ப்பாணம் மாநகர எல்லைக்குள் 73 ரூபா ஐந்து சதப்படியே சீமெந்துப்பக்கட்டுகள் விற்பனை செய்யப்படவேண்டுமென்ற சட்டத்தை மீறி மேற்படி கடைக்காரர்கள் 95 ரூபா முதல் 104 ரூபா வரை விற்பனை செய்ததாக பாவனையாளர் முறையிட்டதைத் தொடர்ந்தே இச்சீமெந்துப் பக்கட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

பறிமுதல் செய்யப்பட்டுள்ள சீமெந்துப்பக்கட்டுக்களை யாழ். மாநகர பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் ஊடாக விற்பனை செய்ய விருப்பதாக விலைக் கட்டுப்பாட்டதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உதவி விலைக்கட்டுப்பாட்டு ஆணையாளர் திரு. ரி. மார்க்கண்டு தலைமையில் சென்ற அதிகாரிகள் கோஷ்டியே மேற்படி பறிமுதலை மேற்கொண்டது. [கி)

**அரிய சந்தர்ப்பம்**

French, German Language வகுப்புக்கள் இலகுவான முறையில் போதனை—குறுகிய காலப்பயிற்சி அனைவரும் சேரலாம். ஆரம்பம்: 29—01—82.

**நாஷனல் அக்கடமி,** மொம்சாக் கட்டிடம், ஸ்ரான்லி, வீதி, யாழ்ப்பாணம். (2045)

**மணிவாசகு**

முன்னவ ஞூர்கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரிவளங்குன்றும்
கன்னங் களவு மிகுந்திடுங் காசினி
என்னரு நந்தி எடுத்துரைத்தானே.

— திருமந்திரம்.

# நமது நோக்கு

## உயிர் தரும் உணவு

உயிருக்கு இருப்பிடம் இருதயம்; இருதய நலனுக்கு உணவே பிரதானம்.

இலங்கைக்கு விஜயம் செய்த அமெரிக்க மருத்துவ நிபுணர் குழு இருதயநோய் பற்றி கருத்துரை வழங்கிய போது இவ்வாறுவற்புறுத்தியிருக்கிறது,

ஓரளவுக்கு இது பொது மக்கள் அறியாத விடயமல்ல. 'பால்நினைந்தூட்டும் தாயும்' 'தாயோடு அறுசுவைபோம்' என்பதும் எங்கள் முனிவர்கள் மொழிந்த உண்மைகள்; இருப்பினும் இன்று இவையை 'செம்பாட்டார்' நம்பிக்கைகளெனக் கைவிட்ட மக்கள் இன்றைய விஞ்ஞானம் சொல்வதைக் கண்மூடி மௌனமாகி கைகட்டிக்கொண்டு ஏற்றுக்கொள்ள சித்தமுடையவராக இருக்கின்றனர்.

இதனை மடமை என்று சொல்வது தவறு; தீரா நோய் தீர்த்தருள வல்லவனாகிய முழுமுதற் கடவுள் இன்றைய விஞ்ஞான உலகுடன் தொடர்புகொள்வது விஞ்ஞான ஆராய்ச்சி மூலமே,

புற்றுநோய் போன்ற சில பயங்கர நோய்களைத் தவிர மற்றைய பல ஆட்கொல்லிகளுக்கு மருந்து கண்டுபிடித்த அற்புதங்கள் சாதாரண மனிதனே அறியாத விடயமல்ல.

நாமிங்கு குறிப்பிடும் கருத்து ''பிறெஸ்ற்மில்க் இஸ் பெஸ்ற்மில்க்'' என்ற நவீன ஆராய்ச்சி பற்றியே!

எத்தனை நவீன பால்மா வகைகளை தாய்ப்பாலுக்காக கொடுத்துவந்த தாய்மாருக்கு மாணிககவாசக சுவாமிகளின் ''பால்நினைந்தூட்டும் தாய்'' என்ற அடியில் 'பால்' தாய்ப்பாலையே குறிக்கின்றது என்று விஞ்ஞானத்தால் நிரூபிக்கப்பட்டுள்ளது. 'கனகமுலையில்' நினைந்தூட்டக்கூடிய ளவிற்குப் பாலுண்டோ என்பது வேறுவிடயம்.

தாய்ப்பால் குழந்தைக்கு எவ்வளவு அவசியமோ; அதேபோன்று இருதய நோய்களாற் பீடிக்கப்படுகின்றவர் உணவுமூலம் வாழ்க்கைமுறையை மாற்றிக்கொண்டால் தப்ப வழி உண்டு என்கின்றனர் வைத்தியஆராய்ச்சி நிபுணர்.

''அறுபது'' என்முல் வீட்டுக்கு வேறுகாவல் தேவையில்லை என்பார்கள்; அந்தப்பாணியில் நாம் சொல்லுவதை அச்ட்டை செய்வது தர்மமாகாது. நம் முன்னோர் அரிசியை (சோற்றை) நம்பி வாழ்ந்தவர்களல்லர். கோதுமை அன்று கேள்விப்படாத பண்டம்; இவ்விரண்டும் இன்று எங்கள் உணவுப் பொருட்களின் இரு கண்களாகிவிட்டன.

வந்தேறு குடிகளான இவ்விருவரும் விரட்டி ஓட்டிய 'செம்பாட்டாரையும்', 'பட்டிக்காட்டாரையும்' யாரென்று சொல்லலாம்? குரக்கன், வரகு, சாமி, சிறுகிழங்கு, ஓடியற்பிட்டு, கூழ், பனாட்டு, பாணி, இலைகுழைவகைகளாகியமுசுட்டை, முல்லை, கொவ்வை, காரை, முருங்கை, சண்டி, மொசுமொசுக்கை, அகஸ்திபோன்றவை.

உலக நாடுகள், மேற்கிலும் கிழக்கிலும் நடத்திய ஆராய்ச்சிகளின் முடிந்த முடிவு என்ன? இலைவகை மரக்கறிகளே உணவுக்கு அத்தியாவசியம்; இருதய நோய்களுக்கும் நீரிழிவு போன்ற அவ்வகைப்பட்ட ஆபத்தான நோய்களுக்கும் இத்தகைய உணவுகளே இன்றியமையாதன.

இவற்றைப் பரபரென்று பொருட்படுத்தும் இன்றைய 'புத்திஜீவிகள்', தென்னிலங்கையில், வீதிவழிகளில் வீசப்பட்டிருக்கும் பொன்னுங்காணி, வல்லாரை, கரட், போஞ்சி போன்ற தாவரப்பொருட்களைத் தாராளமாக வாங்குகின்றனர். மரக்கறி என்றாலும், இலைகுழைஎன்றாலும் அந்தஸ்து உள்ளதாக இருக்க வேண்டுமல்லவா? ஆரிய உணவு வகைகளா அவை?

வேலிகளிலும், தெருவிலும் கண்ட இடமெங்கும் காணப்படும் முல்லை, முசுட்டை, குறிஞ்சாய், காரை சுகத்துக்கு உகந்ததாயிருக்கலாம்; சுயமரியாதை என்ன ஆகும்? நவீனசந்தையில் காணப்படும் பொருட்களே நமக்குத் தேவை.

நோய்கள் குணமடைவதற்குரிய இன்றைய அதிசய சிகிச்சைமுறைகளை நாம் மெச்சவேண்டும்; இருதயத்தை வெளியே எடுத்து ஒரு கடிகாரத்தைத்திருத்து மாற்போல் நடைபெறும் இருதய சத்திரசிகிச்சை இன்றைய மருத்துவக்கலையின் அசாதாரண முன்னேறத்தை உணர்த்துகிறது.

நோய்கள் இன்றுபோல் பயங்கரமான வழிகளில் ஏற்படாது சுகவாழ்வுக்கு உயிர்தரும் உணவே முக்கியம். இவ்வித உணவு எந்த ஏழைக்கும் கிடைக்கும் வகையில் இயற்கை அன்னை உதவுகின்றாள்.

ஆண்டவன் படைப்பில் அந்தந்தச் சூழ்நிலையில் சுகமாக உயிர்வாழ ஏற்ற முறைகளில், காறறு, நீர், உணவு ஒழுங்கு பண்ணப்பட்டிருக்கின்றன. இன்றைய நாகரிக உலகம் இதனை உணர வேண்டிய இக்கட்டுநிலை வந்துவிட்டது.

# சமூகத்தில் ஒருவரைத் தலைவராக்கும் பண்புகள்

## கருத்தரங்கில் விளக்கம்

(யாம்ப்பாணம்)

பொது சேவை செய்பவர்களுக்கு அனபு, பொறுமை, அடக்கம், நேர்மை, ஒழுக்கம் என்பன இன்றியமையாதவை. நல்ல பண்பும் விடாமுயற்சியும்தான் ஒருவரை சமூகத்தின் தலைவர்களாகவும், நற்பிரஜைகளாகவும் ஆக்கிவிட முடியும்.

யாழ்ப்பாண மாவட்ட கல்வித் திணைக்களத்தின் வளர்ந்தோர் கல்விப்பிரிவு யாழ். மாவட்ட கூட்டுறவுசபை ஆகியவை இணைந்து ப. நோ. கூ. சங்க மகளிர் பிரதிநிதிகளுக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் அண்மையில் நடத்திய கருத்தரங்கில் யாழ். மாவட்ட திட்டமிடல் அதிகாரி திரு. வி. செ. சுவாமிநாதன் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்த சில கருத்துக்கள் வருமாறு:

வறுமை, நோய், அறியாமை அடக்குமுறை இவற்றின் இடைவிடாத தாககுதல்களால் ஏதோ பிறந்து விட்டோம், இறக்கும்வரை இருந்து விடுவோம்' என்ற விரக்தி அடைந்து கொண்டிருக்கும் பெரும்பான்மைக் கிராமத்து ஏழைகளுக்கு விடிவுகாட்டத் துணிந்து நிற்கும் மனச்சாட்சியின் பிரதிநிதுகளாகிய உங்களுக்கு விஞ்ஞானரீதியில் அறிவையூட்டி, உங்களது இலக்குகளை அடைந்து கொள்ளும் தோரணையில்தான் இக் கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது, கடந்தசில நாட்களாக நடந்த பல்வேறுபட்ட விரிவுரைகள மூலமும், பல காலமாக துன்பம் நிறைந்த சமூகத்தில் வாழ்ந்ததன் மூலமும் கிராமங்கள் பிரச்சனைகளை ஆழமாகவும் விரிவாகவும் அறிந்திருப்பீர்கள்.

கொள்கைகள் இலக்குகள் இல்லாமல் விடயங்களை நடாத்தத்தொடங்குவது திட்டச்சங்கள் செயல்படுவனவாகவும், செயற்பாடுகள் திட்டமுள்ளவையாகவும் அமைய வேண்டியது அவற்றின் வெற்றிக்கு அவசியமாகும்.

**கட்டுக்கோப்பான சிந்தனை தேவை**

நீங்கள் சாதிக்கவுள்ள விடயங்கள் அளவில் எவ்வளவு வேறுபடினும் அவை பற்றிய கட்டுக்கோப்பான சிந்தனை அவசியமாகும். முதலில் நீங்கள் ஆற்றவுள்ள தேவைக்குரிய பிரதேச எல்லையைத் தீர்மானித்துக்கொள்ளவேண்டும். அடுத்ததாக அந்தக் குறிப்பிட்ட பிரதேசத்தில் என்ன செய்யபோகிறீர்கள் என்பதையும் தீர்மானித்துக்கொள்ள வேண்டும். கிராமங்களின் பிரச்னைகள் நூற்றுக்கணக்கானவை. அவற்றை எல்லாம் ஓரிரு நாட்களுக்குள்ளோ ஒரு மாதத்திற்குள்ளோ நீங்களோ நானோ தீர்த்து விடமுடியாது. பல பிரச்னைகளுக்கும் அடித்தளமாக இருக்கக்கூடிய பொதுப் பிரச்னைகள் சில கட்டாயம் இருக்கும், அவை கிராமத்தில் பலரையும் சில சமயம் அனைவரையுமே பாதிக்கும் பண்புள்ளனவாக இருக்கும். எனவே நீங்கள் முதலில் போர்ப்பிரகடனம் செய்யவேண்டியபொது எதிரியாகப் பொதுப்பிரச்னைகளையே கொள்ளவேண்டும். அவற்றைக் கண்டு பிடிப்பதெப்படி? குறிப்பிட்ட பகுதிகளில் தொடர்ந்து வாழுகின்ற சாதபரணமாகச் சிந்திக்கும் ஆற்றலுள்ள பிரஜைகளுக்கு அவை புலனாகும்.

உதாரணமாக நன்னீர் இன்மை, மல கூடங்கள் இன்மை ஆகியவற்றைப்பற்றி இலகுவாகவே தெரிந்து கொள்ளலாம். குழந்தைகளின் அழுக்கடைந்த மேனி'' என்றுமே சீவாத தலை, பருத்த வயிறுகள், மங்கியகுழி விழுந்த கண்கள், தாய்மார் எப்பொழுதுமே கையிலும் வயிற்றிலுமாக ஏதாவது ஒன்வற வைத்திருத்தல் முதலானவை அச்சமுதாயத்தின் பின்னனி பற்றிய சில விடங்களை எமக்குச் சொல்லாமற் சொல்லித்தரக் கூடியவை.

பின் தங்குதல்களினதும், பிற்போக்கான விடயங்களினதும் பாதிப்புக்களைச் சரிவர அறிந்துகொள்வதற்கும் அவற்றிற்கெதிராக நடவடிக்கை எடுப்பதற்கும் குறிப்பிட்ட பிரதேசத்தில் ஆரம்பத்தில் மதிப்பீடொன்றைச் செய்து கொள்ள வேண்டும்.

**கேள்விக் கொத்துகள்**

மதிப்பீடுகளைச் செய்யும் பொழுது தேவையான தகவல்களைப் பெறுவதற்கேற்ற முறையில் கேள்விக் கொத்துகளை தயாரிக்க வேண்டும். இந்த விடயத்தில் பழையமாதிரிகள். விடயந் தெரிந்தவர்களின் ஆலோசனைகள் பெற்றுக் கொள்ளப்படுதல் விரும்பத் தக்கது. தகவல்களைத்திரட்டுவது அத்துணை இலகுவான காரியமன்று. தகவல்கள் பிழையான நோக்கத்திற்காக பயன் படுத்தப்படமாட்டாதென்பதையும் தகவல்கள் சேகரிப்போர் தவறானவர்கள் அல்லர் என்பதையும் மக்கள் நம்பவேண்டும்.

தேவையான தகவல்களைச் சாணக்கியத்துடன் சேகரித்த பின் அவற்றைப்படித்து அதிலிருந்து சில முடிவுகளுக்கு வந்து, முன்னுரிமை வழங்க வேண்டிய திட்டங்களைத் தெரிந்தெடுக்கவேண்டும். அத்தியாவசியமான விடயங்களின் அடிப்படையில் விடயங்களை இறங்கு நிரைப்படுத்தி ஒழுங்குபடுத்தலாம். அவற்றை நிறைவேற்ற விரும்பும் காலத்தையும் தீர்மானிக்கவேண்டும். இதில் விடயம் தெரிந்தவர்களின் ஆலோசனை அவசியம்.

(6ம் பக்கம் பார்க்க)

# மக்கள் கருத்து

## திருக்கேதீச்சர ஆலய சுற்றுடல்

பாடல்பெற்ற புராதன சைவத் தலமாகிய திருக்கேதீச்சரத்தில் தெரு ஓரத்தில் ஓர் குகை. கத்தோலிக்க சமயத்தைச் சேர்ந்ததாக சிலரால் இரவோடிரவாக நிர்மாணிக்கப்பட்டது. இது சிவத்தலத்திற்கு அபசாரம் என நினைத்து கோயில் வீதியையும் மாற்றி குகையில் வேறு ஒன்றும் செய்யாதவாறு கத்தோலிக்க குருமாருடன் ஒப்பந்தம் செய்தார் சைவப் பெரியார் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள். இப்போ சில அரசியல் வாதிகளும் திருப்பணிச்சபை உறுப்பினர்களும் இதை உதாசீனம் செய்து கத்தோலிக்க தேவாலயம் கட்ட விட்டுவிட்டார்கள். இது சைவத் துரோகம். இதன் காரணமாக திருப்பணிச் சபையினர் உடன் பதவி விலக வேண்டும். கத்தோலிக்க மக்களுக்கு மடு இருக்கிறது. சைவப் புனித ஆலய நிலத்தை ஆக்கிரமித்து சமய பேதத்தை ஏற்படுத்தாதிருக்கும்படி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். திருக்கேதீச்சரமும் சுற்றுடலும் புனித சைவச் சூழ்நிலையில் பாதுகாக்கப்படவேண்டும்.

சதா. ஸ்ரீநிவாசன்.
உடுவில்.

## வவனியாவின் கல்வி நிலை

கல்வியிலேயே பின் தங்கிய மாவட்டங்களில் வவனியாவும் ஒன்ருகும். விரல்விட்டு எண்ணக்கூடிய அளவில் தான் பிரசித்த கல்வி நிலையங்களும் உண்டு. அதிலும் ஆசிரியர்கள் பற்றுக்குறை நிலவி வருவது குறிப்பிடத்தக்கது.

கல்வியின் முக்கியத்துவத்தினை உணர்ந்த இப் பிரதேச இளைஞர்களும், யுவதிகளும் தமது எதிர்கால சந்ததியின் நலன் கருதி வட்டாரக் கல்வி அதிகாரியின் சிபார்சில் 70பேர் க. பொ. த. சாதாரணம், க. பொ. த. உயர்தரம் தகமையுடையவர்கள். வசதிக் கட்டண ஆசிரியராகவும், தொண்டர் ஆசிரியராகவும் சேவை புரிகின்றனர்.

300 ஆசிரியர்கள் பற்றுக்குறையுள்ள இம் மாவட்டத்துக்கு தற்போது வழங்கப்படவிருக்கும் ஆசிரியர்களின் தொகை 65 ஆகும்.

இந்த நிலையில் வசதிக் கட்டண, தொண்டர், ஆசிரியர்களினது நிலை என்ன என்பது இங்குள்ள கல்விமான்களின் கேள்விக்குறியாகும்.

மாவட்ட அபிவிருத்திச் சபையிலும் மேற்படி குறிடபிடப்பட்ட ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்பட வேண்டும் என்ற தீர்மானமும்நிறைவேற்றப்பட்டது ஒன்றுகும்.

இளைய சமுதாயமே ஆசிரியர் சேவை புரிவதால் இவர்களது மனம் தளராவண்ணமும், எதிர்காலம் பாதிக்காத வகையில் ஒரு முடிவை அரசுஎடுக்க வேண்டும் என பலர் கருத்து தெரிவிக்கின்றனர். வடமாகாணத்தில் உள்ள வசதிக் கட்டண, தொண்டர் ஆசிரியர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து தமது நிலையினை ஜனதிபதுக்கும், கல்வி அமைச்சுக்கும், எதிர்க்கட்சித் தலைவருக்கும் கூட்டாக தெரிவிப்பார்கள். ஆனல், நிச்சயம் விடிவு ஏற்படலாம் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

— ரி. விவேகராசா.
வவனியா.

# மாணவர் குழப்பம்

கல்வி வெள்ளையறிக்கை பல்கலைக் கழகத்திலும், பாடசாலைகளிலும் குழப்ப நிலையை உண்டுபண்ணுவதாகச் செய்தி சொல்லுகிறது.

கருத்தரங்குகளுக்குரிய இப்பாரிய விடயம், சுவரொட்டிகளாலும், ஆர்ப்பாட்டங்களாலும், பகிஷ்கரிப்புக்களாலும் விளக்கம் பெறமாட்டாதென்பது மாணவர்களுக்கே புரிய வேண்டும்.

பாரதூரமான எதிர்ப்புத் தெரிவிக்கவேண்டிய கட்டத்திலும் நகரத்தின் ஒரு பிரபல பாதையில் சுலோகங்களுடன் ஒரு ஊர்வலம் நடத்துவது இன்று சட்டவிரோதமானதல்ல; இவற்றை அடித்து முறித்து துரத்திவிடுவதில் அசம்பாவிதங்கள் ஏற்பட்டால் இளைஞர் உலகம் ஒன்றுபட நேரிடும். இவ்வித பொலிஸ் கண்டிப்பு முறைகளைக் கண்டித்தோமொழிய, திட்டமிட்டு குழப்பத்தை வளர்க்கும் நோக்கத்தை நாம் கண்டிக்கத் தயங்கவில்லை.

ஆட்சிக்கு முட்டுக்கட்டையாகவும், தினசரி வாழ்வுக்குத் தடையாகவுமுள்ள செயல எதையும் நாம் ஆதரிக்க முடியாது. கரத்தாலல்ல, கருத்தாலே மக்கள் மனத்தைக் கவரவேண்டும்; ஜனநாயக முறையில் ஆட்சி நடத்தும் எந்த அரசையும் தகாத முறையில் பலவந்தப்படுத்துவது—அதுவும் மாணவ சமுதாயம் அதில் ஈடுபடுவது தவிர்க்கப்பட வேண்டியது.

## 1981 ஆகஸ்டில் பரீட்சை எழுதிய க. பொ. த பரீட் சார்த்திகள் விரக்தி!

[மாவிட்டபுரம்]

கடந்த ஆகஸ்டில் நடந்த க. பொ. த. [சாதாரண] பரீட்சை பெறுபேறுகள் இன்னமும் வெளியாகாதது குறித்து பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகள் விரக்தியடைந்துள்ளனர்.

கடந்த ஆகஸ்டில் கா.பொ.த. (உயர்தர) பரீட்சையும், க. பொ. த. (சாதாரண) பரீட்சையும் நடைபெற்றிருந்தன. ஆனால் க. பொ. த. (உயர்தர) பரீட்சை முடிவுகள் வெளியாகிவிட்டன. க. பொ. த. (சாதாரண) பரீட்சை முடிவுகள் இன்னமும் வெளியாகவில்லை.

6 மாதங்களாக பரீட்சை முடிவுகள் வெளியாகாதது குறித்து பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகள் பெரிதும் கவலையும், விரக்தியும் அடைந்துள்ளனர்.

இப் பரீட்சை முடிவுகள் வெளிவருமென பலமுறை எதிர்பாக்கப்பட்டபோதும் இறுதியில் ஏமாற்றமே கிடைத்ததாக தெரிவிக்கும் பரீட்சார்த்திகள் இப் பரீட்சைக்கு என்ன நடந்தது என கேள்வி எழுப்புகிறார்கள்.

## டியாகோகார்ஸியாவை வளரும் நாடுகளைத்தாக்க அமெரிக்கா பயன்படுத்தும்?

### சோவியத் பத்திரிகை எச்சரிக்கை

மாஸ்கோ, ஜனவரி 21

டியாகோகார்ஷியாவை வளரும் நாடுகளுக்கு எதிரான ஒரு கேந்திரநிலையமாக அமெரிக்கா அதனை பயன்படுத்துவதற்கு அபிவிருத்தி செய்துவருகிறதென்று சோவியத் யூனியன் கருத்து வெளியிட்டிருக்கின்றது.

டியாகோகார்ஸியாவை அணுஆயுதங்கள் வைத்திருக்கக்கூடிய கேந்திரநிலையமாக அமெரிக்காஅபிவிருத்திசெய்து வருகின்றது. இந்த ஆயுதங்களை தேவையேற்படும்போது அமெரிக்கா மேற்காசிய நாடுகள் மீதும் வளரும் நாடுகள் மீதும் பயன்படுத்தக்கூடும் என்று இஸ்வெத்தியா என்ற சோவியத்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

## பாரதி நூற்றுண்டு சிறந்த நூலுக்கு பரிசுவழங்க முடிவு

(கொழும்பு)

மகாகவி பாரதியார் நூற்றுண்டுக்காகப் பாரதியாரைப் பாட்டுடைத் தலைவனாக வைத்து அல்லது பாரதியாரின் சிறந்த கருத்துக்களைப் பொருளாக அமைத்துத் தமிழிலே சிறு பிரபந்த நூல் ஒன்றை ஆக்குபவர்களுக்குப் பரிசில் வழங்கக் கொழும்புத் தமிழ்ச்சங்கம் தீர்மானித்துள்ளது.

இந்நூல் தமிழ்ச் சிறு பிரபந்தவகைகளுள் ஏதாவது ஒருவகையைச் சேர்ந்ததாகவும், ஏதாவது ஒரு பாவகையால் அமைந்ததாகவும் இருக்கலாம்.

பாக்களின் எண்ணிக்கை ஐம்பதுக்குக் குறையாமலும் நூற்றுக்குக்·கூடாமலும் இருத்தல் வேண்டும்.

(4ம் பக்கம் பார்க்க)

## "நல்ல சமுதாயத்தை உருவாக்க மாதர் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும்"

### பாரதிவிழாவில் உரை

(மாவிட்டபுரம்)

''பெண்களால் தனித்து நின்று சமுதாய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த முடியும் என அடுத்துக்கூறியவர் பாரதியார். பெண்களுக்கு விடுதலை பெற்றுத் தந்தவரும் பாரதியாரே. ஆனால் பாரதியாரின் நூற்றுண்டுவிழா கொண்டாடப்படும் இன்றைய சூழ்நிலையில் நாம் முன்னைய நிலையிலேயே இன்றும் இருந்து வருகிறோம். இந்நிலை மாறி பெண்கள் ஒன்றுபட்டு உழைத்து நல்லதோர் சமுதாயத்தை உருவாக்க வழிகாண வேண்டும்''

இவ்வாறு வர்த்தலைவிளான் மகளிர் பாவனையாளர் தகவல் கல்வித்திட்டத்தின் ஆதரவில் நடந்த பாரதி நினைவாஞ்சலியின்போது உரையாற்றிய திட்டத்தின்செயலாளர்திருமதி கு. மாணிக்கவாசகர் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது;

பாரதி காணவிரும்பிய புதுமைப் பெண்கள் இன்னும் நம் மத்தியில் உருவாகவில்லை. ஜப்பான் நாட்டு மகளிர் சகல துறைகளிலும் தீவிரமாக ஈடுபட்டு முன்னணிவகிப்பது போன்று நாமும் ஒன்றுபட்டு பலதுறைகளிலும் முன்னேற்றம் காணவேண்டும். அப்போதுதான் பாரதி கனவு நனவாகும்'' என்றார்.

## 'பெட்டிசம் எழுதுவதைவிட்டு பிரச்னைகளைநேரில்கூறுங்கள்

(துணுக்காய்)

பெட்டிசம் எழுதுவதைத் தவிர்த்து எந்த நேரமும் வந்து என்னிடம் பிரச்னைகளை தெரிவித்தால் உடனுக்குடன் நடவடிக்கை எடுப்பேன்'

துணிக்காயில் அளிக்கப்பட்ட வரவேற்பில் உரையாற்றிய முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. க. ஞானச்சந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திரு ஞானச்சந்திரனுக்கும், மாவட்ட அரசாங்க அதிபராக இருந்து இடமாற்றம் பெற்ற திரு. ஒஸ்டின் ஜெயவர்த்தனவுக்கும் துணுக்காய்ப் பிரிவு உதவி அரசாங்க அதிபராக இருந்து இளைப்பாறிய திரு. ம.கார்த்திகேசுவுக்கும் துணுக்காய்ப் பகுதி மக்களால் உபசார விழா எடுக்கப்பட்டது.

துணுக்காய் பிரதேச கிராம அபிவிருத்தி சங்கங்களும் பொது மக்களும் சேர்ந்து இவ் விழாவை துணுக்காயில்நடாத்தினார்கள். இவ்விழாவுக்கு திரு. க. சோமநாதர் தலைமை தாங்கினார். துணுக்காய் கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் இவ்விழா ஆரம்பமானது.

முன்னாள் அரசாங்க அதிபர் திரு. ஒஸ்டின் ஜயவர்த்தனவும் உரையாற்றினார். துணுக்காய் ப. நோ. கூ. ச. தலைவர் திரு சி. செல்லத்துரை, திருவாவாளர்கள் மு. பாலசிங்கம், வி. கனகலிங்கம் ஆகியோரும் உரையாற்றினார்கள். (க)

## பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் கலை கலாச்சார மறுமலர்ச்சி மன்றுத்தின் பாரதீயப் பொங்கல் விழா நாளை சனிக்கிழமை மாலை சண்டிலிப்பாய் வடக்கு சனசமூகநிலைய அரங்கில் நடைபெறவுள்ளது. இவ்விழாவிற்கு சண்டிலிப்பாய் உதவி இராசாங்க அதிபர் பிரதம அதிதியாக கலந்து கொள்வதுடன் மன்றத்தினால் நடாத்தப்பட்ட பாரதி நூற்றுண்டு விழா கட்டுரை, பேச்சுப் போட்டிகளுக்கு பரிசில்களும் வழங்கப்படும். மன்றத்தின் வெளியீடான "தளிர்" கையெழுத்துப் பிரதி வெளியீட்டு விழாவும் இடம்பெறும். (கெ)

## நீதிபதிக்கு கடிதம் எழுதினர் அபராதமும் சிறையும்

(சாவகச்சேரி)

தாபரிப்பு வழக்கொன்றில் நீதிபதிக்கு கடிதமெழுதிய எதிரிக்கு, நீதிமன்றம் கலையும் வரை மறியலும் 100 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது

இவ்வழக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் நீதிபதி எம். எம். காரியப்பர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சாவகச்சேரியைச் சேர்ந்த சுப்பிரமணியம் தெய்வானை என்பவர் தமது கணவனுக்கெதிராகத் தாபரிப்பு வழக்கொன்று தாக்கல் செய்த பொழுது அவரின் கணவரான எதிரி எஸ். சுப்பிரமணியம் என்பவர் சம்பந்தப்பட்ட வழக்குப்பற்றி நீதிபதிக்குக் கடிதம் ஒன்று அனுப்பியிருந்தார்.

நீதிபதி அவரைப் பார்த்து நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்திற்காக ஏன் உமக்குத் தண்டனை விதிக்கக்கூடாதென்பதற்குக் காரணம் காட்ட முடியுமா எனக் கேட்டார்.

எதிரி சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி எஸ். கே. திரவியநாயகம் இதற்குக் காரணம் காட்ட முடியாதெனவும் அறியாத்தனத்தில் எதிரி இதைச் செய்துள்ளாரெனவும் அவர் வயோதிபர் ஆகையால் அவரை மன்னிக்கும்படியும் கேட்டுக் கொண்டார்.

நீதிபதி எம். எம்.காரியப்பர் நீதிமன்றம் கலையும் வரை சிறைவாசமும் 100 ரூபா அபராதமும் விதித்தார் .(க)

## ஒரு லட்ச ரூபா செலவில் 'மந்திகையில் கயரோக தடுப்பு சிகிச்சை நிலையம்

(புலோலி)

மந்திகை அரசினர் வைத்திய சாலையில் சுமார் ஒரு லட்சம் ரூபா செலவில்கயரோகத்தடுப்புச் சிகிச்சை நிலையமும், சயகயரோகத்தடுப்பு நிவாரண சங்கத்திற்கு அலுவலகமும் அமைப்பதற்கானநடவடிக்கைகளை வடமராட்சி இலங்கைக் கயரோக தேசிய நிவாரணசங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இச்சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் தலைவர் திரு. ஆ. க. மாணிக்கம் தலைமையில் நடைபெற்றபோது தீர்மானிக்கப்பட்டே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அக்கூட்டத்தில் திர்மானிக்கப்பட்ட ஏனைய தீர்மானங்களாவன: மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் எக்ஸ்ரே நிலையத்திற்கான எக்ஸ்·ரே கருவியைத் தருவித்துத் தருமாறு யாழ். மாவட்ட அமைச்சரைக் கோருதல்.

கயரோக நோயாளிகளுக்கு வழங்கப்பட்டுவந்த 'மாதாந்த இடைக்கால நிவாரணப் பணத்தை முப்பதுரூபாவிலிருந்து 50 ரூபாவிற்கு அதிகரித்தல்.

கயரோகத் தடுப்பு கருத்தரங்குகளை இப்பகுதிகளில் நடாத்துதல். சங்கத்தின் வெள்ளி விழாவைக் கொண்டாடுதலும், வெள்ளிவிழா மலரை வெளியிடுதலும். (க)

## தெல்லிப்பளை கொள்ளை: சந்தேகநபரை பிணையில்விட பொலிஸார் ஆட்சேபம்

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை கொள்ளைச் சம்பவம் குறித்து சந்தேகநபர்களை பிணையில் விட பொலிஸ் தரப்பில் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டதால் அவர்கள் பெப்ரவரி 2ம் திகதிவரை றிமாண்டில் வைக்கப்பட்டனர்.

தெல்லிப்பழையிலுள்ளகாங்கேசன்துறை நடேஸ்வரக்கல்லூரி அதிபர் க. குலசேகரத்தின் வீட்டினுள் பயங்கர ஆயுதங்கள் சகிதம் புகுந்த கொள்ளையர்கள் அதிபரையும் மனைவியையும் மிரட்டி அங்கிருந்த பெறுமதி வாய்ந்த நகைகளை கொள்ளையடித்திருந்தனர்.

இது குறித்து கைதான இராஜரத்தினம் ஜெயகுமார். சுப்பிரமணியம் விஜயகுமார் ஆகியகுருக்பிட்டியைசேர்ந்த சந்தேக நபர்கள் இருவரும் ஏற்கனவே அடையாள அணிவகுப்பில் அடையாளம்காணப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருந்தனர்,

இவர்கள் மீண்டும்மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் இவர்களைத் தொடர்ந்து றிமாண்டில் வைக்கவேண்டுமெனசுன்னாகம் பொலிசார் கோரினர்.

இச்சம்பவம் குறித்து இன்னமும் விசாரணைகள் பூர்த்தியடையவில்லை. அத்துடன் மேலும் ஒருவர் இது தொடர்பாககைதுசெய்யப்படவேண்டியிருக்கிறார். ஆகவே இவர்களை பிணையில் விடுவதை ஆட்சேபிக்கிறோம் என பொலிசார் மேலும் தெரிவித்தனர்.

இதனையடுத்து நீதிபதி திரு. சி. வி. விக்னேஸ்வரன் இருவரையும் பெப்ரவரி 2ம் திகதி வரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

1ம் சந்தேகநபர் சார்பில் சட்டத்தரணி எஸ்.ஸ்ரீதரனும் 2ம் சந்தேகநபர் சார்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினமும்ஆஜராகினர். வழக்காளி தரப்பில் சட்டத்தரணி எஸ். பாலசிங்கம் ஆஜரானார். (க)

## பொலிசார் மீது பலாத்காரம்: மாணவர் நால்வரும் மன்னித்து விடுதலை

(மாவிட்டபுரம்)

''அரசாங்க ஊழியர்களான பொலிசார் மீது பலாத்காரம் பிரயோகித்தது பாரதூரமான குற்றமாகும். இருந்தாலும் நீங்கள் மாணவர்களாக இருப்பதால் உங்கள் மீது கருணை காட்டவேண்டியுள்ளது. இனிமேல் இவ்வாறான குற்றச்சாட்டுகளின் பேரில் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டால் உங்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்''.

இவ்வாறு வழக்கொன்றின் எதிரிகளான நான்கு மாணவர்களை நோக்கி மல்லாகம்நீதிபதி திரு. சி. வி. விக்னேஸ்வரன் கூறினார்.

சங்கானைப் பொலிஸ்நிலையத்தில் கான்ஸ்டபிள்களாகப்பணிபுரிந்த சிறிதுமார், சமால்குணதுங்கா ஆகிய இருவரும் கடமையின் நிமித்தம் இளவாலைக்குச் சென்ற சமயம் அங்கு வைத்து இவர்கள் மீது பலாத்காரம் பிரயோகித்ததாக இம்மாணவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இவ்வழக்கு நீதிபதி திரு. சி. வி. விக்னேஸ்வரன் முன்னிலையில்விசாரணைக்கெடுக்கப்பட்ட சமயம் இந்த நால்வரும்மாணவர்களாகையால் இவர்களை மன்னித்து விடுதலை செய்யுமாறு அவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் கோரினார். ஒருவர் 20 வயதும், ஏனையவர்கள் 19 வயதுமுடையவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து நீதிபதி அவர்களை மன்னித்து விடுதலை செய்தார். அத்துடன் தர்மப்பணமாக 100 ரூபா செலுத்துமாறும் உத்தரவிட்டார்.

# புன்னைக்குடா மீனவர் மாதிரிக் கிராமப் பிரச்னை

## அரச எம். பி.க்கள் மத்தியில் கருத்துமோதல்!

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்புத்தொகுதி புன்னைக்குடா கரையோரத்தில் மீன்பிடி அமைச்சினுல் நிர்மாணிக்கப்பட்டுவருகின்ற மீனவர் மாதிரிக்கிராமத்தில் உள்ள வீடுகளை உள்ளூர் தமிழ் முஸ்லீம் மீனவர்கள் புறக்கணிக்கப்பட்டு உள்ளூர் வெளியூர் சிங்கள மீனவர்களுக்கு வழங்கப்படவிருப்பது குறித்து அரசாங்கக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கிடையே கருத்து மோதல்கள் தற்போது ஏற்படத்தொடங்கி விட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 5 சத வீதம் சிங்கள மக்கள் வசிக்கின்றுர்கள். அவர்கள் புன்னைக்குடா பகுதியில் மட்டுமல்ல பல இடங்களிலும் பரந்து வாழ்கின்றுர்கள். புன்னைக்குடாவில் 19 சிங்கள மீனவர் குடும்பங்கள் மட்டும் தான் நிரந்தரமாக வாழ்கின்றுர்கள். இந்நிலையில் இவ் வீடமைப்பு திட்டத்தில் 100 வீடுகள் கட்டப்படுகின்றன. 75 வீடுகள் பூர்த்தியடைந்து விட்டன. இவ்வருடன் பூர்த்தி அடைந்ததும் மாத்தறை, காலி, தெவிநுந்தர உட்பட தென்னிலங்கையிலிருந்து மீன்பிடிக்கவரும் மீனவர்கள் குடியமர்த்துவதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

இத்திட்டம் மட்டக்களப்பு இரண்டாவது பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஜனுப் பரீத் மீராலெப்பை எடுத்த முயற்சியின் பிரகாரம் அமைவதால் மீனவர்கள் தெரிவு இவரின் சார்பில் ஏறுவூர் பிலிமத்தலவ விகாரை மதகுரு மாவட்ட மீன்பிடி உத்தியோகத்தர் வீடமைப்பு அதிகாரசபை அதிகாரி ஆகியோர் அடங்கிய குழுவினரால் தெரிவு செய்யப்பட்டனர். இந்நிலையில் 100 பேரும் சிங்கள மீனவர்கள் ஆவர்.

**அபிவிருத்தி சபையில் ஆட்சேபம்**

இந்நிலையில் புயலால் பாதிக்கப்பட்ட உள்ளூர் தமிழ் முஸ்லீம் மீனவர்கள் புறக்கணிக்கப்பட்டு வெளியூர் சிங்கள மீனவர்கள் தெரிவு செய்யப்பட்டமை குறித்து கடந்த 28ம் திகதிமட்டக்களப்புமாவட்டஅபிவிருத்தி சபையில் பட்டிருப்பு பாராளுமன்ற உறுப்பினர் திரு. பூ. கணேசலிங்கம் ஆட்சேபித்த போது அன்றைய கூட்டத்தில் கலந்து கொண்ட அரசாங்கத்தை சேர்ந்த உள்நாட்டு அலுவல்கள் மந்திரி திரு. கே, டபிள்யூ. தேவநாயகம் மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினா திரு. க. மாணிக்கம் ஆகியோரும் இணைந்து சண்டுபிடித்தனர். அப்போது பிரசன்னமாகி விருந்த பரீத் மீரா லெப்பை மௌனமாக விருந்தார்.

அதன் பின்பு மாவட்ட அபிவிருத்திசபையில் இது தொடர்பாக ஜனுதிபதியின் கவனத்திற்கும் மீன்பிடிஅமைச்சுக்கும் விளக்குவதென தமிழர் விடுதலைக்கூட்டணி — ஐக்கிய தேசியகட்சி உறுப்பினர்களும் முடிவு செய்து நிறைவேற்றுக் குழுவிலும் பிரஸ்தாபிக்கப்பட்டு மீன்பிடி அமைச்சரை ஜனுதிபதியும் சந்திப்பதென முடிவுசெய்தனர்.

**மீராலெப்பை எம். பி. கருத்து**

இதன் பின்பு மட்டக்களப்பு இரண்டாவது பாராளுமன்ற உறுப்பினர் ஜனுப். பரீத் மீரா லெப்பை பத்திரிகையொன்றில் மேற்படி வீடமைப்பு திட்டத்தில்வீடுகள்வழங்கப்படுவது தொடர்பாக விளம்பரம்செய்யப்பட்டபோது எந்தவொரு தமிழ் — முஸ்லீம் மீனவரோ விண்ணப்பம் செய்யவில்லை. அனைவரும் சிங்கள மீனவர்கள் என்பதால் தான் பௌத்த குருவை தெரிவுக்குழுவில் நியமனம் செய்தேன், மீன்பிடி அமைச்சில் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா கரையோரப்பகுதி பாராளுமன்ற உறுப்பினர்களை அழைத்து கூட்டிய மகாநாட்டில் தான்தான் மேற்படிவீடமைப்பு திட்டம் பற்றி விளக்கியதாகவும் பல மகாநாடுகள் நடைபெற்றபோதிலும் இது பற்றி பிரஸ்தாபிக்கப்படவில்லை எனவும் தெரிவித்த பட்டிருப்பு பாராளுமன்ற உறுப்பினர் திரு. பூ. கணேசலிங்கம் தெரிவு செய்து அனுப்பிய 35 மீனவர்களையும் சிங்களவர்களுடன் இணைந்து வாழமுடியுமா? என கேட்டபோது மறுத்துவிட்டனர் புன்னைக்குடாவில் காலங்காலமாக வருகை தந்து மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுவரும் மீனவர்களுக்கே இது உருவாக்கப்பட்டது. வீட்டுவசதி இல்லாத காரணத்தால் இடம் பெயர்ந்து செல்கின்றுர்கள். மட்டக்களப்பு தொகுதி வாக்காளர் எனவும் தெரிவித்த அவர் மட்டக்களப்பு மாவட்டத்தில் நிர்மாணிக்கப்படுகின்ற 1400 சுய உதவி வீடுகளில் ஒன்றுவது சிங்களவர்களுக்கு கொடுக்கப்படவில்லை. இந்நிலையில் இந்த 100 வீடுகளை வழங்கினுல் என்ன என்று கேட்டிருந்தார்.

**கணேசலிங்கம் அறிக்கை**

இதனை மறுத்து பதில் அளிக்குமுகமாக பட்டிருப்பு பாராளுமன்ற உறுப்பினர் திரு. பூ. கணேசலிங்கம் உள்ளூராட்சி அலுவல்கள் மந்திரி திரு, கே. டபிள்யூ. தேவநாயகம் ஆகியோர் பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுத்துள்ளாகள்,

பட்டிருப்பு எம். பி. பூ. கணேசலிங்கம் தனது அறிக்கையில்: புன்னைக்குடா வீடமைப்பு திட்டத்தில் வீடு பெற சிங்களவர்கள் மட்டும்தான் விண்ணப்பித்தனர் என்பது மிகவும் தவறு. என் சார்பில் பட்டிருப்பு தொகுதி 35 மீனவர்கள் விண்ணப்பம் செய்தனர், இந்த 35 பேரையும் எந்தவொரு விசாரணை சபை முன்பும் நிறுத்த தயாராகவுள்ளேன்,

ஜனுப்; பரீத் மீராலெப்பையுடன் இத்திட்டம் பற்றி கதைத்தபோது 26 வீடுகள் மட்டும் தான் சிங்களவர்களுக்கும் ஏனையவை தமிழ் முஸ்லிம் மீனவர்களுக்கும் வழங்கப்படுமென கூறினூர். அன்று கூறியதை இன்று மறுக்கிறூர்.

டிசம் 28ம் திகதி மாவட்ட சபையில் இப்பிரச்னை எழுந்த போது ஜனுப். பரீத் மீரா லெப்பையின் கருத்து கேட்ட போது எவ்வித கருத்து வேறுபாடும் இல்லை என்று தெரிவித்து இது தொடர்பான தீர்மானத்திற்கும் சாதகமாக வார்களித்தார் என்றூர்.

**தேவநாயகம் கூறிய கருத்து**

உள்நாட்டு அலுவல்கள் மந்திரி திரு. கே. டபிள்யு. தேவநாயகம் இதுபற்றி தெரிவிக்கையில்:

மட்டக்களப்பு 2ம் எம். பி, ஜனுப். பரித் மீராலெப்பையின் கோரிக்கையின் பிரகாரம் மீனவர் வீடமைப்பு திட்டம் உருவாக்கப்பட்டதும் அவர் தன் சொந்த விருப்பத்தின் பிரகாரம் குடியமர்த்த முடியாது. இதற்கு அமைச்சர் என்றமுறையில் சம்மதிக்க மாட்டேன்.

இத்திட்டத்திலுள்ள வீடுகள் இன அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படக்கூடாது. இது நியாயமற்றது. புன்னைக்குடாவில் நிரந்தரமாக வசிக்கும் சிங்கள மீனவர்கள் 19 குடும்பங்களையும் தவிர மிகுதி 81ம் இப்பகுதியிலுள்ள தமிழ் முஸ்லீம் மீனவர்களுக்கே வழங்கப்படவேண்டும். தென்னிலங்கையில் வீட்டுவசதிகளுடன் வசித்து மீன்பிடித் தொழிலுக்காக இங்குவரும் மீனவர்களுக்கு வீடுகள் வழங்குவது நியாயமற்றது. வன்மையாக கண்டிக்கப்படவேண்டியது. இவர்களுக்கு நிரந்தர குடியேற்ற வசதி அளிக்க அனுமதிக்க முடியாது. அப்படி அளித்தால் அது சிங்கள குடியேற்றமாகி விடும். இது நடைபெற ஒரு போதும் விடமாட்டேன் என தெரிவித்த அவர் இது பற்றிய கருத்தை ஜனுதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, மீன்பிடி அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா ஆகியோரையும் சந்தித்து வலியுறுத்தவுள்ளதாகவும் தெரிவித்தார்.

**கூட்டணி – ஜனுதிபதி சந்திப்பு**

தமிழர் விடுதலைக் கூட்டணி ஜனுதிபதி சந்திப்பு இறுதியாக கடந்த 19ம்திகதி நடைபெற்ற போது தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர்கள் இது தொடர்பாக பிரஸ்தாபித்தபோது மேற்படி வீட்டுத்திட்ட வீடுகள் மட்டக்களப்பு மாவட்ட மீனவர்களுக்கே வழங்குவதெனவும் முடிவு செய்யப்பட்டது இச் சந்திப்பில் மீன்பிடி அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரர, உள்நாட்டு அலுவல்கள்அமைச்சர் திரு, கே. டபிள்யு. தேவநாயகம் ஆகியோரும் சமுகம் அளித்திருந்தனர்.

மேற்படி வீடமைப்பு திட்டம் மாவட்ட மீனவர்களுக்கு வழங்கப்பட்டால் புயலால் பாதிக்கப்பட்ட இப் பகுதி மீனவர்களுக்கு வரப்பிரசாதமாகவே அமையும்,

தீர்மானம் செய்யப்பட்டுள்ளது. அதனை அமுல் செய்தால் போதும் என்கிறுர்கள் இம்மாவட்ட தமிழ் — முஸ்லீம் மீனவர்கள்.

---

## புன்னாலைக்கட்டுவன் கொள்ளை:

# சந்தேகநபர் அடையாளம் காட்டப்பட்டார்

(மாவிட்டபுரம்)

புன்னாலைக்கட்டுவன் பெற்ரேல் நிலையக் கொள்ளை குறித்து மல்லாகம் நீதிமன்றத்தில் அடையாள அணிவகுப்புக்குட்படுத்தப்பட்ட சந்தேகநபர்கள் அடையாளம் காட்டப்பட்டதையடுத்து பெப்ரவரி 2ம் திகதிவரை றிமாண்டில் வைக்கப்பட்டார்.

புன்னாலைக்கட்டுவன் வடக்கிலுள்ள பெற்ரேல் நிலையத்திற்கு துப்பாக்கி சகிதம் சென்ற இருவர் அங்கு கடமையிலிருந்த செல்வி சத்தியா வேதநாயகி என்னும் பெண்மணியை மிரட்டி அவரது கழுத்திலிருந்த 7000 ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை அபகரித்ததுடன் பெற்ரேல் நிலையத்திலிருந்த ரொக்கப்பணம் 1400 ரூபாவையும் கொள்ளையடித்துச் சென்ற சம்பவம் தொடர்பாக சுண்ணுகம் பொலிசார் குப்பிளானைச சேர்ந்த விசுவலிங்கம் சங்கரலிங்கம் என்பவரை சந்தேகத்தின்பேரில் கைது செய்திருந்தனர்.

இவர் மல்லாகம் ஆரம்ப நீதிமன்றத்தில் பதில் நீதிபதி திரு. ரி. தம்பிரத்தினம் முன்னிலையில் அடையாள அணிவகுப்புக்குட்படுத்தப்பட்டார்

இச்சமயம் மேற்படி பெற்ரேல் நிலையத்தில் கடமை புரிந்த பெண் சந்தேகநபரை அடையாளம் காட்டினூர்.

இதையடுத்து இவர் மல்லாகம் மாவட்டநீதிபதி திரு. சி. வி. விக்னேஸ்வரன் முன் ஆஜர் செய்யப்பட்டசமயம் இவரை பெப்ரவரி 2ம் திகதிவரை றிமாண்டில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

புன்னாலைக்கட்டுவன் பெற்ரேல் நிலையக் கொள்ளையில் இவருடன் சேர்ந்து ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் மற்றய சந்தேகநபரை சுன்னுகம் பொலிசார் தேடிவருகின்றனர். (க)

---

# சங்கிலி அறுத்த இருவர் அடையாளம் காணப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

பட்டப்பகலில் சந்தைக்குச் சென்ற பெண்ணின் 4,000 ரூபா்பெறுமதியான தங்கச்சங்கிலியை அறுத்துக் கொண்டோடியதாகக் கூறப்படும் இருவர் அடையாள அணிவகுப்பில் அடையாளம் காணப்பட்டு , றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

கோப்பாய் புதுச் செம்மணி வீதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் திலகவதி என்பவர் கல்வியன்காட்டுச் சந்தைக்குச் செல்லும் வழியில், அவர் அணிந்திருந்த சங்கிலியை யாழ்ப்பாணம் யமுனுவீதியைச் சேர்ந்த சின்னத்தம்பி சிறிதரன், கிருஷ்ணபிள்ளை கிருஷ்ணகுமார் ஆகிய இரு இளைஞர்கள் அறுத்துக் கொண்டோடியதாகவும் இவர்கள் சுன்னுகம் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு, சங்கிலியும் மீட்கப்பட்டு, சென்ற 6ம்திகதி அடையாள அணிவகுப்பில் அடையாளம் காணப்பட்டதாகவும் தெருவிக்கப்பட்டுள்ளது.

இவர்களிருவரும் நேற்று யாழ் நீதிமன்றத்தில் நீதவான் ரி. யோகநாதன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபொழுது இருவரின் கைவிரலடையாளங்களைப் பதிவு செய்யுமாறும், அடுத்தமாதம் 3ம் திகதி வரை றிமாண்டில் வைக்குமாறும் உத்தரவிட்டார். (மா)

---

## ஐக்கியசங்க ஆராதனை

[அரியாலை]

யாழ்ப்பாணக் கிறிஸ்தவ ஐக்கிய சங்கம் ஜனவரி 23—ம் திகதி தொடககம் ஐக்கிய வாரத்தைக் கொண்டாட ஏற்பாடு செய்துள்ளது.

23—ந் திகதி சனிக்கிழமை மாலை சுண்டிக்குளி புனிதர் போவான் ஆலயத்தில் நடைபெறும் விசேட ஆராதனையில் இளவாலை புனித ஹென்றிக் கல்லூரி உபஅதிபர் வண. பிதா ஐஸ்சின் ஞானப்பிரகாசம் அடிகளார் அருளுரை நிகழ்த்துவார்கள். இரவு 7 மணிக்கு ஐக்கிய விருந்து நடைபெறும்.

24ந் திகதி ஞாயிறு ஐக்கிய ஞாயிறுக அநுட்டிக்கப்படும். அன்று மாலை 5 மணியளவில் யாழ்ப்பாணம் புனித பேதுரு வானவர் மெதடிஸ்த தேவாலயத்தில் ஐக்கிய ஆராதனை நடைபெறும்.

23ந் திகதி சனிக்கிழமை காலை 9 மணியளவில் யாழ். றிம்மர் மண்டபத்தில் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் தென்னிந்திய திருச்சபையின் யாழ். திருமறை மாவட்ட பேராயர் மகாகனம் டி. ஜே. அம்பலவாணர் ஆண்டகை தலைமையில் நடைபெறும். (க)

---

## அவர் ஒரு சைவப்பழம்

தமிழ்பேசும் சமூகத்தின்ஒரு சைவப்பழம் எம்மைவிட்டுப் பிரிந்து இறைவனடி சேர்ந்து ஓராண்டு பூர்த்தியாகிறது. அமரர் சரவணமுத்து தருமலிங்கம் தனது இலட்சியங்களுக்காக திரிகரண சுத்தியுடன் பேசியும் செயலாற்றியும் வந்தார்.

தொண்டர்களுக்கு யார் எத்தீமைகள் செய்யினும் அவற்ருல் அவர்களுக்கு ''இன்பமேயெந்தாளுந்துன்பமில்லை''

அமரர் தருமலிங்கம் அவர்களிடம் எடுத்த காரியத்தை முடிக்கும் ''இதயதாகம்'' குடிகொண்டிருந்தது.

ஆசிரியர் 1922ஆம் ஆண்டு பிறந்து சைவசமய ஆசாரப்படி தாமும் வாழ்ந்து காட்டி மாணவரையும் அழ்வழிக்கு நெறிப்படுத்தினுர். இறுதிக் காலத்தில் திருக்கேதீஸ்வரம் கௌரி அம்பாள் வித்தியாலயத்தில் ஆசிரியப்பணியாற்றி ',கேதீச்சரத்தின் பெருமையும் தொண்டர் பெருமையே'' ''தொண்டர் நாள் தொறுந் துதிசெய அருள் செய் கேதீச்

(5 ம் பக்கம் பார்க்க)

---

## பட்டப்பின்படிப்பை மேற்கொள்வார்

(கோண்டாவில்)

யாழ்ப்பாணம் பல்தொழில் நுட்ப நிறுவனத்தின் ஆங்கிலப் பகுதியில் விரிவுரையாளராகக் கடமையாற்றிய திரு. எம். திருநாவுக்கரசு ஒரு வருடகால பட்டப்பின்படிப்பை மேற்கொள்ள கொழும்பு பல்கலைக் கழகத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

---

## செயற்திட்ட கலந்துரையாடல்

(சுழிபுரம்)

கிராம அபிவிருத்திச் செயல் திட்டம் பற்றிய கலந்துரையாடல் ஒன்று இன்று காலை பண்ணுகம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில்

[5ம் பக்கம் பார்க்க]

---

## இறந்தநூலு கு...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இந்நூல்களை 82 மார்ச் 31ம் தேதிக்கு முன் பதிவு அஞ்சலாகப் பொதுச் செயலாளர், 7, 57—ஆம் ஒழுங்கை, கொழும்பு 6 என்னும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் எனக் கொழும்பு தமிழ்ச்சங்க பொதுச் செயலாளர் திரு. க. இ. க. கந்தசாமி தெரிவித்துள்ளார்.



செல்வி விஜயகுமாரி பரமேஸ்வரனின் பரத நாட்டிய அரங்கேற்றம் நாளை சனிக்கிழமை மாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் யாழ். மாநகர முதல்வர் திரு. இராசா விசுவநாதனினதும் திருமதி விசுவநாதனினதும் தலைமையில் நடைபெறும். யாழ். இந்து மகளிர் கல்லூரியில் கல்வி கற்று வரும் செல்வி விஜயகுமாரி, யாழ். நாட்டியாலய அதிபர் திருமதி விமலா யோகநாதனின் மாணவியாவர். இவர் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்திலும், குடிவரவு குடியகல்வு திணைக்களத்திலும் கடமையாற்றி சமீபத்தில்இளைப்பாறிய திரு.பரமேஸ்வரனினதும்,கந்தர்மடத்தைச் சேர்ந்த திருமதி பரமேஸ்வரனினதும் புதல்வியாவர்.

## கொள்ளைப் பொருள்களை எடுத்துச்செல்ல அனுமதி

(மாவிட்டபுரம்)

மருதனுமடம் வழிப்பறிக் கொள்ளை தொடர்பான சந்தேகநபர்கள் இருவரும் தொடர்ந்து பெப்ரவரி 2 ம் திகதிவரை றிமாண்டில் வைக்கப்பட்டனர்.

முல்லைத்தீவு மேலதிக அரசாங்க அதிபர் திரு. பி. எல். பற்றிக்கை மருதனுமடத்தில் வைத்து வழிமறித்து அவர் அணிந்திருந்த மோதிரம், அவரிடமிருந்த ரொக்கப்பணம் என்பவற்றைக் கொள்ளையடித்தது தொடர்பாக சந்தேக நபர்களான எஸ். துரைசிங்கம், எஸ். இரவீந்திரன் ஆகியோரை சுன்னுகம் பொலிசார் கைது செய்திருந்தனர். இதில் ஒருவர் மிருசுவிலையும் மற்றவர் உடுவிலையும் சேர்ந்தவராவர்.

இவர்கள் இருவரும் மல்லாகம் ஆரம்ப நீதிமன்றத்தில் பதில் நீதிபதி திரு. ஜி. வி. பாலசிங்கம் முன்னிலையில் அடையாள அணிவகுப்புக்குட்படுத்தப்பட்டு அடையாளம் காணப்பட்டதையடுத்து றிமாண்டில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் மீண்டும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டசமயம் பெப்ரவரி 2ம் திகதிவரை றிமாண்டில் வைக்கப்பட்டனர்

சந்தேக நபர்களிடமிருந்து மீட்கப்பட்ட கொள்ளை பொருட்களை மேலதிக அரசாங்க அதிபர் எடுத்துச் செல்லவும். நீதிபதி. திரு. சி. வி. விக்னேஸ்வரன் அனுமதித்தார். (க)

### ...வர் ஒ ..

(4ம் பக்கத் தொடர்ச்சி)

சரமதுதானே'' என்ற 'சம்பந்தர் கூற்று தினமும் கூறி அப்புண்ணிய பூமியிலே இறையுடன் இரண்டறக்கலந்தாரென்பதில் சந்தேகம் இல்லை. இவரது இனியசுபாவம், நல்லொழுக்கம், சீரிய பண்பு, இந்நினைவுகள் எம்மைவிட்டு இலகுவில் அகலமாட்டா.

சிதம்பரநாதன்
(சங்கரத்தை இந்து வாலிபர் சங்க செயலாளர்)

### ...சயற்திட்ட ..

(4ம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெறும். யாழ். மாவட்ட செயற்திட்ட உத்தியோகத்தர் திரு. இ. விஜயசுந்தரம் கலந்துகொள்ளவிருக்கிறூர். (க)

# 'சைவர்களாக பிறந்தமைக்கு பெருமைப்பட வேண்டும்'

## சுப்பிரமுனிய சுவாமிகள் அருளுரை

(மாவிட்டபுரம்)

சைவ சமயத்தவர்களாக பிறந்ததையிட்டு நாம் மிகவும் பெருமைப் பட வேண்டும். எமது நல்வாழ்க்கைக்கு வழி காட்டும் சைவ சமயத்தை நாம் பேணிப் பாதுகாக்க வேண்டும்.

இவ்வாறு அமெரிக்காவிலிருந்து வருகைதந்துள்ள ஸ்ரீ சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் அருளுரை நிகழ்த்தும் போது கூறினூர்.

கந்தசுவாமி கோவிலுக்கு தமது சீடர்களுடன் வருகை தந்த சுவாமிகள் அங்கு நடந்த விசேட பூசையில் கலந்து கொண்டபின் அருளுரையாற்றுகையில் கூறியதாவது: எமது சைவசமயமே மேலானதோர் சமயமாகும், சைவசமய கருத்துகள் சுலபமாக கற்கக்கூடியவை.10 ஆயிரம் மைல்களுக்கப்பாலிருந்து நாம் இங்கு வருவதற்கு சைவசமயம்தான் இணைப்பாக விளங்குகின்றது.

உலகெங்கும் பல்வேறு நாடுகளில் சைவாலயங்கள் எழுந்துள்ளன. சிறந்த வேத ஆகமங்கள் உள்ளன, இறைவனை கிரியை முறையில் நேரில் காணக்கூடிய உணர்வை உண்டுபண்ணும் அந்தணர்கள் இருக்கிறூர்கள். சிறந்த சமய சான்றோர்கள், வழிகாட்டிகள் எமக்கு முன்னேடிகளாக விளங்குகின்றனர். ஆகவே சைவசமயம் சிறப்புற்று திகழ்கிறது என்பதை மறுக்கமுடியாது.

ஆனூலும் சைவ மக்களை வேறு சமயத்தவர்கள் விலைக்கு வாங்கிவிட முயல்வதால் சமயத்தின் எழுச்சி குன்றுகிறது. மேலான சைவசமயத்தை விட்டு நாம் வேறு எந்த சமயத்தையும் அனுசரிக்கக் கூடாது. சலுகைகளை காட்டினூலும் மதமாற்றத்திற்கு ஆளாகாதுதப்பித்துக்கொள்ள வேண்டும். சைவசமயத்தை பாதுகாக்கும்படி முருகன் உங்களுக்குகட்டளையிடுகிறூன். அக்கட்டளையை நிறைவேற்ற உழைப்பதே சைவமக்களது கடமையாகும்.

மாவை ஆலய பிரதம குருவும் ஆதீன கர்த்தருமான மகாராஜஸ்ரீ சு. து. சண்முகநாதக் குருக்கள் சுவாமிகளை வரவேற்றூர்.

## "ஆத்மீக வாழ்வே விமோசனமளிக்கும்"

(புலோலி)

''ஆத்மீக வாழ்வே மக்களுக்கு விமோசனத்தையளித்து பிறப்பின் இலட்சியத்தை அடைய வழி வகுக்கும், ஸ்ரீ இராமகிருஷ்ணர், விவேகானந்தர் அன்னைசாரதா ஆகியோர் உலக மக்களுக்கு இதையே போதித்தனர். நாமும் இவ்வழி நின்றெழுக வேண்டும்,''

இவ்வாறு பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் நடைபெற்ற சுவாமி விவேகானந்தரின் 120—வது ஜயந்திவிழாவின்போது ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம பிரார்த்தனை மண்டபக் கட்டிட வேலைகளைச் சப்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்து உரையாற்றிய யாழ். அரசாங்க அதிபர் திரு, தேவநேசன் நேசையா குறிப்பிட்டார்.

சுவாமி சித்ரூபானந்தா தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் தொடர்ந்து உரையாற்றிய அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா குறிப்பிட்டதாவது:

கொழும்பிலும், மட்டக்களப்பிலும் இராமகிருஷ்ண மிஷன் இயங்கி வருகின்றது. அவற்றுடன் நான் தொடர்பு கொண்டிருக்கிறேன். அவை மக்களுக்குச் சிறந்த சேவையை வழங்கி வருகின்றன.

யாழ். மாவட்டத்திலும் இவ்வாச்சிரமம் அமைந்து மக்களுக்குச் சேவை செய்வது எனக்கு மிகவும் மகிழ்ச்சியை அளிக்கின்றது. இச்சேவாச்சிரமம் ஸ்ரீ இராமகிருஷ்ணர் சுவாமி விவேகானந்தர், அன்னைசாரதா ஆகியோரின் தூய வாழ்க்கை முறையையும் போதனைகளையும் புகட்டிப் புனித பணியாற்றி வருகின்றது. இச்சேவாச்சிரமம் சிறப்பாக இயங்கி சேவை புரிவதற்கு சகலரும் போதிய ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

சுவாமி சிதரூபானந்தா தமது தலைமையுரையில் குறிப்பிட்டதாவது:

சுவாமி விவேகானந்தர் எமக்கு ஆத்மீக ஞானம், ஞானதானம் ஆகிய இரண்டையும் தனது வாழ்க்கை மூலம் காட்டியுள்ளார். சுவாமி விவேகானந்தருக்கு எமது நாட்டிலும் நினைவுச்சின்னம் அமைக்கவேண்டும் இச்சேவாச்சிரமம் இராமகிருஷ்ணரின் போதனைகளுக்கும் அமைய சகல மதங்களுக்கும் பொதுவானதாக இயங்கி வருகின்றது.

நாம் எடுத்த காரியம் முக்கியமானது. அதைவிட அந்தக் காரியத்தைஎந்த வழிகளில் செய்து முடிக்கவேண்டுமென்று சித்திப்பதே முக்கியமென்று சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளார். அவரது வழியை நாமூம் பின்பற்ற வேண்டும். இங்கு அமைக்கப்படவுள்ள பிரார்த்தனை மண்டபத்தை பூர்த்தியாக்குவதற்கு சகல மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

யாழ். பொதுசனத் தொடர்புகள் அதிகாரி திரு, எம், சண்முகசுந்தரம், பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும் ஆகியோர் உட்பட இன்னும் பலர் இவ்வைபத்தில் கலந்துகொண்டனர். (க)

## இசை விழா இன்றைய நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழகத்தின் இசைவிழா இன்று ஆரம்பமாகி மூன்று தினங்கள் தொடர்ந்து நடைபெறவிருக்கிறது.

சுன்னுகம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் தினமும் இசைவிழா பிற்பகல் 4மணி முதல் இரவு 8—30 மணிவரை நடைபெறும்.

இன்றைய நிகழ்ச்சிவருமாறு

4.15. — 4.35 பாட்டு இ. ராஜீவி, ம. ஜெயகங்கா, பா. நாகராஜேஸ்வரி, சி.ஜனதா, செ. அம்பிகாவதி, ரி. திலகவதி வயலின், மிருதங்கம் எஸ். வரதராஜன்.

4.35—4.55 வயலின் உ. சந்தானகிருஷ்ணன், வசந்தமாலா குணரத்தினம், சாந்தினி பாலசிங்கம், கனகமணி கனகசபை, வாஸந்தி கணேசன், ஜெயமணி வைத்திலிங்கம், மிருதங்கம் கே. விவேகானந்தன்.

4.55—5.15 பாட்டு பொ. ஜெயலஷ்மி, தி. கமலராணி, ச. ஜெயவாணி, அ. நளினி, சு. சந்திரவதனி, வயலின் உ. சந்தானகிருஷ்ணன். மிருதங்கம் கே. ஷண்முகானந்த சர்மா

5.20—5.30 தலைமையுரை பேராசிரியர் கா. இந்திரபாலா (தலைவர் — வரலாற்றுத்துறை நுண்கலைத்துறை)

5.30—615நந்தினி சோமசுந்தரம வீணை, எஸ். பிரணவநாதன் மிருதங்கம், கே. ஷண்முகாநந்த சர்மா கஞ்சிரா.

6.15—7.00 சிவசக்தி சிவநேசன் பாட்டு, பாக்கியலஷ்மி நடராஜா வயலின், எஸ் மகேந்திரன் மிருதங்கம், எஸ். வரதராஜன் கஞ்சிரா.

7.00—7.45 தனதேவி சுப்பையா வயலின், எஸ். மகேந்திரன் மிருதங்கம், வி, ஜம்புநாதன் கஞ்சிரா.

7.45—8.30 ஏ. கே. கருணுகரன் பாட்டு, பாக்கியலஷ்மி நடராஜா வயலின், ஏ. சந்தானகிருஷ்ணன் மிருதங்கம், எஸ். வரதராஜன் கஞ்சிரா.

## ஏகமனதாக தெரிவு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச்சங்க 1ம் இலக்கக் கிளையின் புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. அ. ஆறுமுகம்' உப தலைதர் திரு. க. அரசரத்தினம், செயலாளர்; திரு. இ. இராசகுலேந்திரன்,

பொதுச் சபைப்பிரதிநிதிகளாக திருவாளர்கள் நடராசா இ. இராசகுலேந்திரம், இ. ஆறுமுகம், ஜனுப் முத்துராசா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (க)

### மூதாட்டியின் சங்கிலி கொள்ளை:

## சந்தேகநபரை வங்கிஊழியர் சங்கிலியுடன்மடக்கி பிடித்தார்

[மட்டக்களப்பு]

தன்னந்தனியாய வைத்திய சாலைக்கு சென்றுகொண்டிருந்த வயோதிப பெண்ணின் ரூபா 4500 பெறுமதியான சங்கலியை பறித்துக்கொண்டு ஓடிய இருவரில் ஒருவரை பொதுமக்கள் துரத்திப் பிடித்து அவரிடம் இருந்து சங்கிலியையும் கைப்பற்றினூர்கள்

இச் சம்சவம் மட்டக்களப்பு கோவிந்தன் வீதியில் உள்ள இலங்கை வங்கிக்கு அருகாமையில் நடைபெற்றது.

செங்கலடி வந்தாறுமூலை வாசியன திருமதி அப்புசிங்கா அழகம்மா [55வயது] என்னும் வயோதிபப் பெண் சம்பவதினம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த மகனைப் பார்ப்பதற்காக பஸ் நிலையத்தில் இருந்து இறங்கி கோவிந்தன் வீதிவழியாக சென்றுகொண்டிருந்தா ராம்.

அப்போது பின்தொடர்ந்து வந்த இரு இளைஞர்களில் ஒருவர் பெண்ணின் கையைப் பிடிக்க மற்றவர் சுமார் 4500 ரூபாபெறுமதியானசங்கிலியை கழற்றி எடுத்தாராம். உடனே பெண்ணின் அவலக்குரல் கேட்டு இலங்கை வங்கி ஊழியரான செ. இந்திரசோதி என்பவர் துரத்திச்சென்று பொதுமக்கள் உதவியுடன்ஒருவரைப் பிடித்துசங்கிலியை கைப்பற்றினூர். மற்றவர் ஓடிமறைந்து விட்டார்:

மேற்படி நபர் மட்டக்களப்பு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார். சந்தேக நபரான அமரக்கோன் முதியான்சலகே நீர்கொழும்பு வாசியாவர்.

மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி திரு. ரி. சுந்தரலிங்கம் முன்னிலையில் சந்தேகநபர் ஆஜர்செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார். (க)

## வெற்றி தோல்வி இல்லை

(அரியாலை)

யாழ்ப்பாணம் முஸ்லிம்விளையாட்டுக் கழகத்திற்கும் தர்கா நகர் வை. எம். எஸ். சி. விளையாட்டுக்கழகத்திற்குமிடையில் தர்கா நகர் சாஹிரா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வ உதைபந்தாட்டப்போட்டி வெற்றி தோல்வியின்றி முடிந்தது. (க)


வெஸ்லி மானிப்பாய்
தினசரி: 2.30 6.15 9. 30
பட்டாக்கத்தி பைரவன்

7 வது-மகளிர் வாரம்
ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்—ஸ்ரீதேவி
நீல மலர்கள்

வெலிங்டன் [யாழ்ப்பாணம்] தினசரி 4 காட்சிகள்
அன்னப்பறவை

ராணி (யாழ். நகர்) 3-வதுஜனத்திரள் வாரம்
தினசரி 10.30, 2.30, 6.15 9.30
சிவாஜி லட்சுமி
தங்கைக்காக

றீகல் (யாழ். நகர்) தினசரி 10—30, 2—00, 4—30, 7—00, 9—30
Damnation Alley

மனோரா (யாழ்ப்பாணம்) தினசரி10—30,2—30,6—30, 9—30
சிவாஜி—கே. ஆர். விஜயா நடித்த
நான் வாழவைப்பேன்

ராஜா (யாழ். நகர்) சரஸ்வதி [திருமலை]
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்—ஸ்ரீதேவி—சக்கரவர்த்தி—லட்சுமிஸ்ரீ
தர்ம யுத்தம் (ஈஸ்ட்மன் கலர்)

வின்ஸர் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த், படாபட், தேங்காய் சீனிவாசன்
6 இருந்து 60 வரை
(புதிய பிரதி)

சாந்தி (யாழ். நகர்) 10—30, 2—30, 6—15, 9—45
127வது வெற்றித் தினம்
கமல் ஸ்ரீதேவி
குரு
பரபரப்பூட்டி காட்சியளிக்கும் கடைசி வாரம்!

ஸ்ரீதர் தினசரி: 10:30, 2:30, 6:15, 9:30
யாழ். நகர்
கமலஹாசன ஸ்ரீதேவி (இருவேடம்) நடித்த
கல்யாண ராமன்
(புதிய பிரதி)


## இன்றைய பலன்

தை மாதம் 9ம் திகதி
வெள்ளிக்கிழமை
(22—1—82)

மேடம்: உள்ளத்தில் உவகை துள்ளும், நண்பர்கள் உங்களை உற்சாகமாக வரவேற்பார்கள், முதியவர் ஒருவர் முன்னேற்றத்துக்கு வழிகாட்டுவார், தேன்சிந்தும் நிகழ்ச்சிகள் நடைபெறுவதுடன் தேடியதும் கிடைக்கும்.

இடபம்: ஏமாற்றத்தின் எதிரொலி பழிவாங்கும் உணர்ச்சியைத் தூண்டும், எதிலும் விரக்தி மனப்பான்மை தென்படும், வேண்டாத நடவடிக்கையின்மூலம் நண்பர்களைப் பகைத்துக்கொள்ள நேரிடலாம்.

மிதுனம்: குடும்பம் இன்று கலைக்கோயிலாக மாறும்; இசைத்துறையில் அதிக ஆர்வம் பிறக்கும், பிள்ளைகளினுல் பெருமைக்கு இடமுண்டு, சுற்றுடலிலும் வேண்டியதைச் சாதிக்கக்கூடிய செல்வாக்குப் பெருகும்.

கடகம்: அந்நியர் சகவாசமும் உங்களை ஆபத்தில் மாட்டிவைக்கும், சிறிய விடயங்களுக்குக்கூட அதிக ஆத்திரப்படுவீர்கள், உங்கள் வீட்டிலேயே பூசல்கள் தோன்றக்கூடும், அடக்கம்வேண்டும்.

சிங்கம்: புதிய பொருட்களை கொள்வனவு செய்வதற்கு இன்று நலம், வெளியிடத்துத் தொடர்புகளிலும் நல்ல மாறுதல்கள் தென்படுகின்றன, மாணவர்களாயின் கல்வியில் அதிக ஆர்வம் பிறக்கும்.

கன்னி: தொழில்பகுதியில் புதிய வாய்ப்புக்கள் கிடைக்கலாம், எதிர்பாராத இடத்திலிருந்து அழைப்பிதழ் கிடைப்பதற்கான சந்தர்ப்பம் உண்டு, சிலருக்கு திடீர் இலாபங்களுக்கும் இடமேற்பட முடியும்.

துலாம்: புதிய கோணத்திலிருந்து பொருள் வரவுக்கு இடமுண்டு, துணிவையே துணையெனக்கொண்டு காரியங்களைச் சிறப்பாகச் செய்வீர்கள், பொதுசன தலைமையுடன் புகழும் தேடிவரும்.

விருச்சிகம்: குறுக்கு வழியில் இறங்குவதால் சட்டத்தின் பிடியில் மாட்டிக்கொள்ளக் கூடும், திரைமறைவில் உங்கள் நடவடிக்கைகள் கண்காணிக்கப்படும்.

தனு: நான் என்ற அகம்பாவம் தலைதூக்கி நிற்கும், வேண்டியவர்களின் ஆலோசனையைக் கேட்காததால் பின்பு வருந்த நேரிடும், வயிற்றுக் கோளாறுக்கு இடமளியாது கவனமெடுக்கவும்.

மகரம்: சொற்சிலம்பம் ஆடுவதில் இன்று முன்னணியில் நிற்பீர்கள், சொகுசான வாழ்வும் கிடைக்கும், பிறருடைய மதிப்புக்கும் இலக்காவீர்கள், வரவேற்கவேண்டிய தினம்.

கும்பம்: எதிர்பார்த்த வேதனம் இடையில் தடைப்படலாம், சிலர் வாழ்க்கையில் கடன் தொல்லையும் அதிகரிக்கும், சகோதர வழியால் சஞ்சலத்திற்கு இடமுண்டு, தெய்வ நம்பிக்கைவேண்டும்.

மீனம்: நீண்டநாள் தலையிடி கொடுத்த ஒரு பிரச்னை இன்று நல்ல முடிவுக்குவரும், தாய் வழிமூலம் புதிய ஆதரவு கிடைக்கக்கூடும், விளையாட்டு வீரர்களுக்கு இன்று வெற்றித் தினமாகும், நல்ல நாள்.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## விளையாட்டுப் போட்டி

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப்போட்டி விளையாட்டு அமைச்சின் ஆதரவுடன் எதிர்வரும் பெப்ரவரி மாதத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் கரபந்தாட்டம், உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம், எல்லை, மரதன் ஓட்டம், ஆண்கள் சைக்கிள் ஓட்டம், பெண்கள் சைக்கிள் ஓட்டம், மெய்வல்லுநர் போட்டி ஆகிய பல போட்டிகள் இடம்பெற உள்ளன. (கு

## உதைபந்தாட்டப் போட்டி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட உதைபந்தாட்டக் கோஷ்டி எதிர்வரும் 23ம் திகதி முல்லைத்தீவில் முல்லைத்தீவு மாவட்டக் கோஷ்டியுடனும் 24ம் திகதி யாழ். மாவட்டக் கோஷ்டியுடனும் யாழ்ப்பாணத்தில் மோதுகின்றன.

### யாழ். மத்திய கல்லூரியில்

## பாரதி நூற்றுண்டு விழா கொண்டாட ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரியில் பாரதி நூற்றுண்டுவிழா கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இவ்விழாவையொட்டி கல்லூரி மாணவர் மத்தியில் கட்டுரை, கவிதை, பேச்சுப்போட்டிகள் நடாத்திப்பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

பேராசிரியர் க. கைலாசபதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ், கவிஞர் முருகையன் உட்பட மேலும் பலர் இவ்விழாவில் பங்குபற்றவுள்ளனர் பெப்ரவரி மாதம் இரண்டாம் வாரத்தில் இவ்விழா நடைபெறும்.

விழாவின் கலை நிகழ்ச்சிகளாக உயர்வகுப்பு மாணவர்களின் 'பாஞ்சாலி சபதம்' நாடகமும், சங்கீத பூஷணம் திலகநாயகம் போலின் இசைக்கச்சேரியும் நடைபெறவுள்ளன.

யாழ்,மத்திய கல்லூரித் தமிழ் மன்றம் கலா மன்றம் ஆகியவற்றுடன் மேற்படி கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச்சங்கமும் இணைந்து இவ்விழாவை நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்து வருகின்றன. (க)

### பளை கொள்ளைவழக்கு:

## 1-ம். 2-ம் எதிரிகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை

(சாவகச்சேரி)

பளை கொள்ளை வழக்கில் 1ம், 2ம் எதிரிகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

இவ்வழக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் நீதிபதி எம். எம், காரியப்பர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் பளை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் எழுது வினைஞராகக் கடமையாற்றும் திருமதி எம். மகாலிங்கம் என்பவரது வீடு உடைத்து உட்புகுந்து காயப்படுத்திச் சுமார் 24,000 ரூபா பெறுமதியான நகைகளைக் கொள்ளையடித்ததாக அப்பகுதியைச்சேர்ந்த பொ. வேலும் மயிலும், எஸ். நவரத்தினசிங்கம் என்போருக்கு எதிராகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. நீதிபதி எம். எம். காரியப்பர் விசாரணை முடிவில் 1ம் எதிரிக்கு ஒவ்வொரு குற்றச்சாட்டுகளுக்கும் தலா 6 மாசம், 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறையும் 2ம் எதிரிக்கு 3 மாசம், 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் விதித்தார்

1ம் எதிரிசார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி எஸ். கே. திரவியநாயகமும் 2ம் எதிரி சார்பில் சட்டத்தரணி சீ. பாலக்கிருஷ்ணனும் ஆஜரானுர்கள்.

## சம்பியனுக தெரிவு

(அரியாலை)

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்பட்ட ஏழு பேர்களைக் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் கலந்துகொண்ட நாவாந்துறை சென். மேரிஸ் கழகம் அதனை எதிர்த்து விளையாடிய குருநகர் கிறீன்பீல்ட் கழகத்தை 7 : 1 கோல்களால் தோற்கடித்து சம்பியனுகத் தெரிவு செய்யப்பட்டது.

22 கழகங்கள் கலந்துகொண்ட இப்போட்டியில் அரையிறுதிப் போட்டியில் கலந்துகொண்ட குருநகர் கிறீன் பீல்ட் கழகம், குருநகர் பாடும்மீன் கழகத்தை 5 : 2 கோல்கள் வித்தியாசத்திலும், நாவாந்துறை சென். மேரிஸ்

(7ம் பக்கம் பார்க்க)

## சமூகத்தில்..

(2ம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்ட பிரதேசப் பிரச்னைகளைச் சரியானபடி அடையாளம் கண்டு செயற்படுத்தற்கு ஏற்றவற்றை முன்னுரிமைப்படுத்திய பின் அவற்றை நடைமுறைப்படுத்தற்கு உதவியான சாத்தியப்பாட்டு அறிக்கையைத்தயாரிக்கவேண்டும். அவ்வறிக்கை நிகழ்ச்சிகளின் நோக்கம் அமுல் படுத்தும் நிறுவனம், தொழில் நுட்ப உதவி, ஆலோசனை, நிதி மூலகங்கள், செலவு மதிப்பீடுகள், எதிர்பார்க்கப்படும் பெறுபேறு முதலான அனைத்தையும் சுருக்கமாக ஆனல் தெளிவாக எடுத்துக்காட்ட வேண்டும். இது செயற் திட்டத்துக்கு ஒரு அறிமுகமாக அமையும். சாத்தியப்பாட்டு அறிக்கையைத் தயாரிக்கும் பொழுது மனத்தில் சில விடயங்களைக் கொள்ளவேண்டும். செயற்படுத்தற்கேற்ற பொருத்தமான அமைப்பு, பயன்படுத்தக்கூடிய வளங்கள் மனித சக்தி, அரசாங்க அலுவலங்களிலிருந்து கிடைக்கும் உதவி, தன்னிச்சை நிறுவனங்களின் ஒத்துழைப்பு முதலானவை பற்றி தெளிவான கண்ணோட்டம் இருக்கவேண்டும். அபிவிருத்திக்கான நடவடிக்கைகளின் பொழுது மக்களின் மனமுவந்த பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளும் உபாயங்களை தொடர்ந்து கொள்வதோடு முடிந்தளவு எதிரிகளை சம்மதிக்காது விடயங்களைக் கையாளும் நாகரிகத்தைச் சொந்தமாக்கிக்கொள்ள வேண்டும்.

மதிப்பீட்டின் பின் திட்டங்களை அடையாளம்கண்டு முன்னுரிமைப்படுத்தி, சாத்தியப்பாட்டு அறிக்கைகளைத் தயாரித்தது, நிதியையும் கண்டுபிடித்தபின் அவற்றைச் செயல்படுத்துதல் ஆரம்பமாகும். செயற்பாடு தொடர்பாக வேலைகளைப் பிரித்து நிறைவேற்றும் காலங்களுக்குரிய கால அட்டவணையைத் தயாரிக்க வேண்டும்.

உரிய காலத்தில் வேலைகளை முடிக்காவிட்டால் விலையேற்றம் முதலான தளம்பும் காரணிகள் திட்ட இலக்குகளை நிறைவேறற முடியாமல் செய்யலாம். தடைகள் பல காலத்துக்குக்காலம் ஏற்படலாம்.

குறிப்பிட்ட இலக்குகளைத் திட்டமிட்டவாறு அமுல் நடத்தி முடிந்ததும் கடந்தகால நிகழ்வுகளை மீளாய்வு செய்ய வேண்டும். 'இலக்குகளுக்கேற்ப சாதனை அமைந்ததா? இதனுல் எதிர்பார்த்த பலா பலன்கள் கிடைத்தனவா? என்பவற்றைப்பற்றி எல்லாம் விரிவாக அறிந்துகொள்ள வேண்டும். இந்த ஆய்வு எதிர்காலத் திட்டங்களை ஆரம்பித்து நடத்துவதற்கேற்ற நல்ல அனுபவங்களைச் சொல்லித்தரும்.

''மனிதர்களுக்கு சேவை செய்வதே மனிதனின் கடமையென்ற'' நல்வாக்கை மறந்து விடாதீர்கள். (க)

# வரி விளம்பரம்

## வகுப்பு

எயர் கொண்டிசனிங் அன் ரெப்பிறிஜிறேசன் செய்முறைப் பயிற்சிகளுடன் 1-2 82இல் வகுப்புகள் ஆரம்பம்.. Auto Cool Engineers (சாந்தி சினிமா முன்பாக) கந்தப்பசேகரம் வீதி, யாழ்ப்பாணம். (2026)

J. E. C.யின் புதிய—பழைய வகுப்புகள் அனைத்தும் 58, ஸ்ரான்லி வீதியிலுள்ள கட்டிடத்தில் நடைபெறும். (நாகவிகாரைக்கு அருகில்) (2037)

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள 5 ஸ்ரீ 8297 இலக்கமுடைய லம்பிரட்டா 150 C C ஸ்கூட்டர் விற்பனைக்கு உண்டு, வி. நடராஜா, 'கவித வாசா', கால்வாய், மாவிட்டபுரம், தெல்லிப்பழை. (2030)

கம்பியூட்டர் புரொகிராமிங் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. எங்கள் நிறுவனத்திலுள்ள கம்பியூட்டர் இயந்திரத்தில் செய்கை முறைப் பயிற்சிகளும் (செய்முறை பயிற்சி) அளிக்கப்படுகின்றன. இருபாலாரும் கற்கலாம். புதிய வகுப்புக்கள் ஆரம்பம் 23-01-82. விபரங்களுக்கு: Auto Cool Engineers (சாந்தி தியேட்டருக்கு முன்பாக) கந்தப்ப சேகரம் வீதி, யாழ்ப்பாணம். (2028)

33 ஸ்ரீ 3000 தொடர்பிலக்க ஒஸ்டீன் சேம்பிறிஷ் வான், ஹொன்டா C 90 மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு உண்டு. நா. சாம்பசிவம், அன் கோ, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம், (2039)

## பயிற்சி

விசேட ஒரு மாத எலக்றிக்கல் வயரிங் பயிற்சி, வெல்டிங் பயிற்சி 03—02—82 ஆரம்பமாகிறது. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி, 9, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (2014)

## வாடகைக்கு

காங்கேசன்துறை வீதியிலிருந்து ஐம்பதுயார் தூரத்தில் நாச்சிமார் கோயிலுக்கும் மில்க்வைற் ஸ்தாபனத்திற்குமிடையில் சகல வசதிகளுடன் வீடு உடனடியாக குத்தகைக்கு உண்டு. தொடர்புகொள்க: தருமராஜா, 569, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 2007

## ஏலவிற்பனை

காலம்: 31—1—1982 காலை 10 00 மணி
இடம்: மட்டுவில் நாடு கிளை 1, வாடியடி, பூநகரி.

**பொருள்கள்**

1. 4 கலன் தகரம்
2. 45 கலன் தகரம்
3, கழிவு மாவு
4. கழிவு சீனி
5. உலொறி ரயர், கியர் பொக்ஸ், வில்லுத் தகடு
6. பெற்றோமாக்ஸ், டோச்லைட் இன்னும் பல.

கூடிய கேள்விக்காரர் உரிய தொகையை உடன் செலுத்தி பொருட்களை அப்புறபபடுத்தவேண்டும்,

**பொதுமுகாமையாளர்,**
பூநகரி ப. நோ. கூ, சங்கம்,
(2040) பூநகரி.

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்

## பின்னுறுதிக் கட்டளை

தர்மக்கேணியில் வசித்துக் காலஞ்சென்ற நாராணர் புண்ணியரின் மரண சாதன விடயத்தில்
மரணமெய்தியவர்

வழக்கு இலக்கம்
197/ தத்துவம்

சிவில் நடைமுறைக் கோவைச் சட்டத்தின் 525 (1)—ம் பிரிவின் பிரமாணங்களுக்கு அமைய செய்யப்படும் விண்ணப்பம் சம்பந்தமாகவும்.

1. சண்முகம் கணேசுவும் பெண்
2. செல்வமலரும் இருவரும் தர்மக்கேணி, பளை.

மனுதார்கள்

இவ்வழக்கு 1981—ம் ஆண்டு கார்த்திகை மாதம் 26—ந் திகதி சாவகச்சேரி மாவட்ட நீதிபதி உயர்திரு. கனகசபாபதி விஸ்வலிங்கம் விக்கினேஸ்வரன் அவர்கள் முன்னிலையில் மனுதார்கள் சார்பில் அவர்களின் சட்டத்தரணிகள் பரராஜசிங்கமும் அம்பிகைபாலனும்'' என்னும் நாமத்தில் செயலாற்றும் திருவாளர்கள் முத்தையா பரராஜசிங்கம் செல்லப்பா அம்பிகைபாலன் அவர்கள் சமூகமாயிருக்க மனுதார்களின் மனுவும், சத்தியக் கூற்றும் மற்றும் அவற்றுடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் வாசிக்கப்பட்டு மனுவிலும் சத்தியக்கூற்றிலும் உள்ள கூற்றுக்கள் முதற்தோற்றத்தில் நிருபிக்கப்பட்டுள்ளவென நீதிமன்றம் திருப்தியடைந்த தன்மேல் பின்வருமாறு கட்டளையிடப்பட்டுள்ளது.

இக்கட்டளைக்கு மாமுன காரணங்கள் ஏதும் இருப்பின் 1982—ம் ஆண்டு மாசி மாதம் 17—ந் திகதி அன்று அல்லது அதற்குமுன்பாக குறித்த மனுதார்களால் அல்லது வேறு அக்கறையுள்ளவர்களால் காட்டப்பட்டாலன்றி,

1979—ம் ஆண்டு ஆடி மாதம் 11—ந் திகதி பிரசித்த நொத்தாரிஸ் சி. பொ. மயில்வாகனன் முன்பாக 3574—ம் இலக்கத்தில் முடிந்த இந்நீதிமன்றத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருப்பதுமானதும் மேற்சொல்லப்பட்ட மரணமெய்தியவரால் நிறைவேற்றப்பட்டதுமான மரணசாதனம் நிருபிக்கப்பட்டுள்ளதென்றும் அம் மரணசாதனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிறைவேற்னர் மேற்சொல்லப்பட்ட மனுதார்களேயென்றும்அவ்வாமுன நிறைவேற்றுனர் என்ற வகையில் குறித்த மரணசாதனத்தின் மீதான நிர்வாக தத்துவப் பத்திரங்கள் மனுதாருக்கு வழங்கப்பட வேண்டுமென்றும் இத்தால் கட்டளையிடப்படுகிறது.

1981—ம் ஆண்டு கார்த்திகை மாதம் 27—ந் திகதி.

ஒப்பம்
**க. வி. விக்னேஸ்வரன்,**
மாவட்ட நீதிபதி

தயாரித்தவர்கள்:
**பரராஜசிங்கமும் அம்பிகைபாலனும்**
மனுதார்களின் சட்டத்தரணிகள். [2041]

## சா... பிய..ன்..

(6 ம் பக்கத்தொடர்ச்சி)

கழகம், குருநகர் ஸ்போட்ஸ் கிளப்பை 4 : 2 கோல்கள் வித்தியாசத்திலும் தோற்கடித்து வெற்றியீட்டி இறுதிப் போட்டியில் கலந்துகொண்டன.

போட்டிக்குப் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட யாழ் அரசாங்க அதிபரும், யாழ் அபிவிருத்திச் செயலாளருமான திரு. தேவநேசன் நேசையா போட்டியில் வெற்றி பெற்றோருக்கு விருதுகள் வழங்கினார். (க)

"சம்பவதினம் கைலாசபிள்ளையார் கோயிலடியில

# இறந்தவரும் நானும் எதிரியைத் தாக்கினோம்"

(யாழ்ப்பாணம்)

''சம்பவதினம் எதிரியை நானும் இறந்தவரும் கைலாசபிள்ளையார் கோவிலடியில் வைத்துத் தாக்கினோம்'' என்று கைலாசபிள்ளையார் கோவிலடியில் அருளானந்தம் திருநாவுக்கரசு என்பவர் கொலையுண்டது தொடர்பானகொலைவழக்கில் தொடர்ந்து சாட்சியமளித்த செல்லத்துரை மகேந்திரன் என்பவர் கூறினார். இவ்வழக்கில் வைத்திலிங்கம் வைகுந்தவாசன் (ராதா) என்பவர் இறந்தவரைக் குத்திக் கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

யாழ். நீதிமன்றத்தில் எதிரியின் சட்டத்தரணி ஜிம்மி ராசரத்தினம் குறுக்கு விசாரணை செய்கையில்,

சாட்சி தொடர்ந்து கூறியதாவது:

29—7—81ல் நானும் எனது சகாக்களும் எதிரியிடம் பிரச்சினைப்பட வேண்டும் என்ற சதிக்கு திட்டமிட்டு திருநாவுக்கரசுவை அழைக்கவில்லை. சம்பவம் நடந்த தினம் எதிரியினுடைய தாயினுடையதாயாகிய செல்லமுத்துவுக்குக் கல்லெறி விழுந்து தலையில் காயமுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டது அந்நேரம் தெரியாது. பின்பு கேள்விப்பட்டேன்.

சம்பவ தினத்தன்று இறந்த திருநாவுக்கரசுவும் நானும் இந்த எதிரியை கைலாச பிள்ளையார் கோவிலடியில் தாக்கினோம். அந்நேரம் அன்ரன் யோசப், பாபு, மனோகரன், கருணாகரன் சேகர் ஆகியோர் நின்றனர். நாங்கள் 7 பேரும் ஒருமித்துச் சென்றோம். எதிரி தனியாக அழைக்கப்பட்டு வந்தார். குத்தினது கிறிஸ் கத்தியால், நான் அதை அவதானித்தேன். எனக்கு சம்பவ தினத்துக்கு முன்பு கிறிஸ் கத்தியைத் தெரியும், ஒன்றரை வருடத்துக்கு முன்பு இந்தியாவில் நான் கிறிஸ்கத்தியை கடைகளில் கண்டேன். வட இந்தியாவில் அமிர்சா என்ற இடத்தில் கிறிஸ்கத்தியைக் கண்டேன். கிறிஸ்கத்தி கூரானது; கைப்பிடி இருக்கும். ஆனல் சம்பவதினம் கைப்பிடியைக் காணவில்லை. நான்எதிரி வைத்திருந்த கத்தியைப்பிடித்துப் பார்க்கவில்லை.

சம்பவம் நடந்த தினம் கைலாசபிள்ளையார் கோவிலடியில் 3 கிறிஸ் கத்திகளை கண்டேன். ''எதிரியின் கடைசித் தம்பியாகிய உதயகுமார் (14 வயது) சாட்சிக்கு காட்டப்படுகிறார். )இந்த சின்னப் பிள்ளையிடமும் அன்று கிறிஸ் கத்தியைக் கண்டேன்.

எதிரி எங்கிருந்து கிறிஸ் கத்தியை கொண்டுவந்தார் என்பது தெரியாது. மடியில் இருந்து எடுக்கவில்லை.

நாங்கள் ஆறுபேரும் அவ்விடம் நின்றோம். எதிரி ஓடிவரும்பொழுது ஆட்கள் பத்துபதினைந்து பேரளவில் நின்றார்கள். அப்பொழுது இறந்த திருநாவுக்கரசு பக்கத்தில் நின்றார். எதிரி வந்து திருநாவுக்கரசுவை கத்தியால் குத்தினார். நான் வடிவாகப் பார்த்தேன். எதிரி எனக்கொன்றும் செய்யவில்லை. என்னை நோக்கி வரவில்லை வேறு யாருக்கும் ஒன்றும் செய்யவுமில்லை.

எதிரியின் தம்பிமார் சம்பவம் நடந்த இடத்துக்கு கிட்ட வரவில்லை. எதிரியின் தம்பிமார் கையில் கத்திகள் இருந்தன. அவை எவை என என்னல் கூறமுடியாது.

நான் இறந்தவரை அழைத்துச்சென்றபொழுது தம்பிமார் கத்தி வைத்திருந்ததை காணவில்லை.

இறந்தவருக்கு குத்து விழுந்தவுடன் என்னுடன் அவருக்கு உதவி செய்வதற்கு அன்ரன் ஜோசேப்பும் பாபுவும் வந்தனர். நான் இறந்தவரை நடத்திக்கூட்டிக் கொண்டுவரும் பொழுது இருவரும் வந்தார்கள்.

பொலிஸ் வாக்கு மூலத்தில் நான் இந்த எதிரி கிறிஸ்கத்தியுடன் என்னை நோக்கி வந்தார் என்று கூறியதாக ஞாபகமில்லை, ஆனல் அப்படி எதிரி **என்னை நோக்கிவரவில்லை.** என்னை நோக்கிவந்தார் என்று கூறியிருந்தால் அது பிழை. முன்கூறியவை இரண்டையும் பொலிசுக்கு கூறியிருந்ததாகச் சொல்லப்பட்டால் அது பிழை.

சட்டத்தரணி; எதிரி தரப்பில் கூறுகிறேன் நீங்கள் மது அருந்திய பின்கைலாய பிள்ளையார் கோவிலடிக்கு சென்நீர்கள் — அதை மறுக்கிறேன்.

கேள்வி: மதுபோதையில் குத்து தவறி இறந்தவருக்கு விழுந்து விட்டது. — அதை மறுக்கிறேன்.

நான் அன்று கால் போத்தல் சாராயம் அருந்தினேன். இறந்தவரும் அன்ரன் ஜோசப்பும் ஏறக்குறைய தலா அரைப் போத்தல் குடித்தார்கள். கால் போத்தலுக்குக் கூட குடித்தால் வெறிக்கும், கைலாயபிள்ளையார் கோவிலடிக்குச் செல்லும் பொழுது அவ்வளவு வெறியில்லை,

அன்று நடந்ததெல்லாம் ஞாபகமிருந்தது.

குருநகர் பீச்றோட்டைச் சேர்ந்த செபஸ்தியாம்பிள்ளை அன்ரன் ஜோசப் (31 வயது) சாட்சியமளித்தார். அவரை உதவிப் பொலிஸ் அதிபர் நவரத்தினராஜா குறுக்குவிசாரணை செய்தார்.

சாட்சி கூறியதாவது:

30.7.81ல் பி. ப. 2.30க்கு நானும் மகேந்திரனும் இன்னும் சிலரும் திருநெல்வேலிக்கு மரணவீடடுக்குச் சென்றோம். இறந்த திருநாவுக்கரசுவும் வந்தார். இறுதிக் கிரியை முடிந்த பின் மாட்டீன் றோட்டுக்கு வந்த சேகர் தனது வீட்டுக்குச் சென்றுவிட்டார். இறந்தவரும் அவரது வீட்டுக்குப் போய் திரும்பவும் எங்களுடன் வந்துவிட்டார்.

நான் இறந்தவர் மகேந்திரன், கருணாகரன், பாபு, மனோகரன் ஆகிய ஆறுபேரும் மாட்டீன் ஒழுங்கையில் வேலுப்பிள்ளை வீட்டுக்குச் சென்று சாராயம் அருந்தினோம்.

திருநெல்வேலிக்குப் போகும் பொழுது முதல்நாள் பிரச்சினை தெரியாது குடிக்கும்போதும் தெரியாது மனோகரனைகைலாச பிள்ளையார் கோவிலில் வரும் பொழுது தெரியாது. நாங்கள் வேலுப்பிள்ளை வீட்டில் சாராயம் குடிக்கும்போது தெரியும். இரவு 9—30 இருக்கும். மகேந்திரன் தனக்கும் எதிரிக்கும் உள்ள பிரச்சினை கூறியபொழுது கருணாகரன் கூறினர், எதிரி தன்னுடன் படித்தவர் என்றும் அவரைக் கூப்பிட்டு இதைப்பற்றிக் கதைக்கலாம் என்றும் சென்னர்.

பின்பு நானும் கருணாகரனும் எதிரியைக் கூப்பிட்டோம். அப்பொழுது எதிரி வீட்டில் இருந்தார், கருணாகரன் கூப்பிடும்பொழுது எதிரி வந்தார் நாங்கள் எதிரியை கூட்டிவந்து மகேந்திரன் நின்ற இடத்துக்கு வந்தோம்.

இறந்த திருநாவுக்கரசு எதிரியை நேற்றைக்கு என்ன பிரச்சினை நடந்ததென பேசப்பட்டார்கள்,

இறந்தவர் எதிரிக்கு கையால் ஒரு அடி அடித்தார். அதன் பின்பு எதிரி ஆயுதத்தைத் தனது மடியிலிருந்து எடுத்தார். உடனே நான் கிறிஸ் வைத்திருக்கிறான் என்று சிறிது தூரம் ஓடி வலது பக்கமாக நின்றேன். திரும்பி என்னுடைய சைக்கிளை எடுக்கவரும் பொழுது மகேந்திரன் இறந்தவரைப் பிடித்துக்கொண்டிருந்தார். இறந்தவரின் உடம்பில் காயமிருந்தது. மகேந்திரன் சொன்னார், ராதா குத்திவிட்டான் என்று ராதா எதிரி) இறந்த திருநாவுக்கரசுவும் ராதா குத்திவிட்டான் என்றார்.

அவ் வழியால் சென்ற ஒரு காரைமறித்து நானும் மகேந்திரனும் பாபுவும் பெரியாஸ் பத்திரிக்கு கொண்டு சென்றோம். வைத்தியசாலைக்குக் கொண்டுபோனபோது வைத்தியர் இறந்துவிட்டதாகச் சொன்னார். அன்று இரவு பொலிசார் சாட்சியத்தை பதிவுசெய்தனர்.

திருநாவுக்கரசு எதிரியை பிரச்சினைபற்றி பேசிய பொழுது எதிரி திருநாவுக்கரசுவுக்கு எங்களுச்குதான் பிரச்சினை நீ ஏன் தலையிடுகிறாய் என்றார் இறந்தவர் எதிரியை கன்னத்திலறைந்தார்.

அப்பொழுது இறந்தவர் மதுபோதையில் இருந்தார். அரைப் போத்தல் சாராயம் குடித்தார். நான் காப்போத்தல் குடித்தேன், வழக்கமாக அரைப்போத்தல் சாராயம் குடிப்பேன் இதை தாங்கும் சக்திஉண்டு.

சம்பவ தினம் நாங்கள் கைலாசபிள்ளையார் கோவிலடிக்குச் செல்லும் பொழுது6 பேருக்கும் சாடையானவெறி, கிறிஸ்கத்தி எதிரியுடைய கையில் மட்டும் இருந்தது. எதிரியின் தம்பியாகிய உதயகுமாருடைய கையில் இல்லை. மற்றத்தம்பி கையில் இருந்தது.

கயிலாயபிள்ளையார் கோவிலடி கலம்பகம்நடந்தபொழுது எதிரியின் தம்பியார் எதிரிக்கு கிறிஸ்கத்தியை கொடுக்கஎதிரி அதை மடியில் செருகினார். அத்தருணம் மனோகரனைத் தவிர மற்றவர்கள் என்னுடன் நின்றார்கள். கொடுத்தவர் 2 கத்தி வைத்திருந்தவர். கருணாகரன் எதிரியைக்கூட்டி வந்த பின்புதான் தெரியும். தம்பிமார் தொடர்ந்து வந்தனர். அவர்கள் வந்தபொழுது ஆயுதம் காணவில்லை. ராதா கையில் ஆயுதம் காணவில்லை.

## நல்லொழுக்க வாலிபர் இயக்கம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் வலந்தலை நல்லொழுக்க வாலிப இயக்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் திரு. சி. பழனிமலை தலைமையில் நிகழ்ந்த போது பின்வருவோர் நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: சி. சற்குணராசா, செயலாளர்; சி. குராரவேலு, உப தலைவர்; நா பேரம்பலம், உப செயலாளர்: செல்வி நா. வரதலட்சுமி, பொருளாளர்: சு. தர்மராசா, விளையாட்டுத் தலைவர்: நா, ச. பத்மநாதன், கணக்குப்பரிசோதகர்; ஐ, தேவகருணாகரன்.

நிர்வாக உறுப்பினர்களாக நா. குணேசன், நா. வை. இரட்ணம், செல்விகள் சி. மகேஸ்மணி, ஐ. அன்னரத்தினம், செ. ராஜசுலோசனா, ப. தேவமனோகரி, ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்,

(இ)

# ஆங்கிலத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பதால் சுயபாஷைக்கு ஆபத்து ஏற்படாது

## கல்வி வெள்ளை அறிக்கை விவாதத்தில் 'காமினி'

(கொழும்பு)

''எமது கல்வித் திட்டத்தில் ஆங்கிலத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பதினுல் சுயபாஷைக்கு ஆபத்து வந்துவிடுமென்று கருதுவதில் அர்த்தமில்லை'' யென்று காணி, காணி அபிவிருத்தி. மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திசநாயக்கா நேற்றுப் பராளுமன்றத்தில் பேசுகையில் கூறினர்.

கல்வி வெள்ளை அறிக்கை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேலும் கூறியதாவது;

''கல்வி வெள்ளை அறிக்கை 3 ஆணைக்குழுக்கள் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் பதினுறு கல்விமான்களினுல் தயாரிக்கப்பட்டது.

பூகொட பிரேமரத்ன ஆணைக்குழு கல்வி சம்பந்தமான பொது அறிக்கை ஒன்றைத்தயாரிப்பதற்காக இரண்டரை வருடங்களாக விசாரணை நடத்தியது. இவ்விசாரணையின்போது 500 மகஜர்கள் ஆராயப்பட்டன. 200 பேர் சாட்சியமளித்தனர்.

டாக்டர் ஞானலிங்கம் ஆணைக்குழு தொழில் நுட்பக் கல்வி, தொழிற் பயிற்சி ஆகியன குறித்து 2 வருடங்களாக விசாரணை நடத்தியது.

சுசுதபால ஆணைக்குழு தொழிற்பயிற்சி பெறுபவர்களைப் பற்றி 2 வருடங்களாக விசாரணை நடத்தியது,

இந்த ஆணைக் குழுக்கள் நடத்திய விசாரணைகளை அடிப்படையாக வைததே இந்த வெள்ளை அறிக்கை தயாரிக்கப்பட்டது.

1921ம் ஆண்டில் 56·4 வீதமான ஆண்களுக்கும் 21 வீதம் பெண்களும் எழுதப்படிக்கத் தெரிந்திருந்தனர். 1948ல் 70·1 வீதம் ஆண்களும் 43·8 வீதம் பெண்களும் எழுதப்படிக்கத் தெரிந்திருந்தனர்.

1982ல் 95 வீதம் ஆண்களும் 84 வீதம் பெண்களும் எழுதப்படிக்கத் தெரிந்துள்ளனர்.

ஆசிய, ஆபிரிக்க நாடுகளிலேயே இலங்கை கல்வியில் உயர்ந்த இடத்தை வகிக்கிறது இதற்கு இந்நாட்டின் கல்வித் திட்டமேகாரணமாகஉள்ளது.

இந்நாட்டின் கல்வித்திட்டங்களுக்கு அமைய கல்வி கற்றவர்களே இன்று டாக்டர்களாகவும் நிபுணர்களாகவும் கல்விமான்களாகவும் திகழ்கிருர்கள்.

கல்வி வெள்ளை அறிக்கையின்படி 5 ம் தர புலமைப் பரிசில் பரீட்சை நிறுத்தப்படும் என்றும் 8ம் தர பரீட்சை சான்றிதழ் முறையில் மாற்றம் செய்யப்படும் என்றும் எதிர்காலத்தில் சுயபாஷைக்கு இடமில்லைஎன்றும் தவருகவிமர்சனம் செய்யப்படுகிறது. (ம—இ)


★ முயல்
★ வரிக்குதிரை
★ சந்திரிகா ★ தேனீ
★ யானை
★ கொடி மார்க்
ஓடுகளும்
மற்றும் செங்கல் முதலியவற்றுக்கும் விஜயம் செய்யுங்கள்

ஏக விநியோகஸ்தர்கள்:—
மு. தா. பொன்னம்பலம்
36, கே. கே. எஸ். வீதி — யாழ்ப்பாணம்
போன்: 7493



மிகவும் குறைந்த
விசேட
விமானக் கட்டணங்கள்
யாழ்ப்பாணத்தில்
தற்பொழுது
மக்கினென்ஸ் வழங்குகிறது
ஃ சிங்கப்பூர் செல்வோருக்கு
மிகவும் கூடிய கழிவுடன், மற்றும்
ஃ மத்தியகிழக்கு ஃ லண்டன்
உலகின் எப்பாகத்துக்கும்
விரும்பிய விமானத்தில்
விமான டிக்கட்
ஃ அமெரிக்கன் எக்ஸ்பிரஸ்பிரதிநிதிகளான
எம்மிடம்
வங்கியில் அறவிடும்
அதே கட்டணத்தில் (TRAVELLERS CHEQUES)
பிரயாணக் காசோலைகள்
நாடுங்கள்
மக்கினென்ஸ் ட்ரவல்
சேவிஸ் (சிலோன்) லிமிட்
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
த. பெ. எண் 92 தொலைபேசி: 8154


## தரமான செவ்விள நீர்க் கன்றுகள்

(யாழ்ப்பாணம்)

குறுகிய காலத்தில் பயன் தரக்கூடிய தரமான செவ்விளநீர்க் கன்றுகளைக் காலி மாவட்டத்திலிருந்து தருவித்து, யாழ். லயன்ஸ் கழகத்தினர் விநியோகஞ்செய்கின்றனர். பழைய கில்னர் கல்லூரி வளவிலுள்ள வலது குறைந்தோர் இல்லத்தில் செவ்விளநீர்க் கன்றுகளைப் பெற்றுக்கொள்ளலாம். கையிருப்பில் குறைந்த தொகையே இருப்பதனுல் உடன்தொடர்பு கொள்ளுமாறு யாழ். லயன்ஸ் கழகத்தினர் தெரிவிக்கின்றனர்.

## பாராளுமன்றத்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சார் குதிரைகள் மீது அங்கு வந்து ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்களைக் கலைத்தனர். மாணவர்கள் கடற்கரையிலுள்ள மணற்பகுதியில் இறங்கி அங்கும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இவர்களைப் பொலிசார்கலைத்து கோல்பேஸ் ஹோட்டல் பகுதியில்கொண்டு போய்விட்டனர். இந்தநாடகம் சுமார் ஒருமணி நேரம் நடைபெற்றது. ஒரு மாணவி காயமுற்றுள்ளார். அவரைப் பொலிசார் ஆஸ்பத்திரியில் சேர்த்தனர்.

மதிய இடைவேளைக்குப் பின்னர் சபைகூடியபொழுது பிரதி சபாநாயகர் திரு. நோர்மன் வைத்தியரத்ன தலைமைவகித்தார். அரச தரப்பில் தமது உரையைத் தொடர்வதற்கு அமைச்சர் காமினி திஸநாயக்க பிரசன்னமாய் இருக்கவில்லை. அமைச்சர் விமலா கன்னங்கரா மாத்திரமே காணப்பட்டார்.

இதை அவதானித்த பிரதி சபாநாயகர் எதிர்க்கட்சித் தலைவரை உரைநிகழ்த்தும்படி கேட்டுக்கொண்டார். திரு. அ. அமிர்தலிங்கம் தமது உரையை ஆரம்பிக்குப வேளையில் அமைச்சர் திரு. காமினி திஸநாயக்கா அவசரமாக சபையில் பிரவேசித்தார். அதன்பின் அவர் தமது உரையைத் தொடர்ந்தார். (ம)

## இந்திய...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ணம் விஜயம் செய்வதற்கான உதவிகள்வழங்க ஜனுதிபதி ஒப்புக்கொண்டுள்ளார்.

இதன்படி இந்திய ஜனுதிபதி பெப்ரவரி 4 ம் திகதி காலை ஹெலிகொப்டர் மூலம் காலை 11 30 மணிக்கு யாழ். நகரில் வந்து இறங்குவார். அதன் பின் யாழ்மாநகரசபை அளிக்கும் பொது வரவேற்பில் கலந்து கொள்வார். 12-15 மணிக்கு இந்திய ஜனுதிபதி யாழ்ப்பாணத்திலிருந்து அனுராதபுரத்துக்குப் புறப்பட்டுச் செல்வார். (க)

## மாணவர் நடத்திய

(1ம் பககத் தொடர்ச்சி)

டுமே கடமையாற்றிவருகிருர்.

''நாட்டில்இன்று 23.2மாணவர்களுக்கு ஒரு சிங்கள ஆசிரியர் என்ற அடிப்படையில் கடமையாற்றுகின்றனர். ஆனுல் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 30·4 மாணவர்களுக்கு ஒரு தமிழ் ஆசிரியர் என்றஅடிப்படையிலுள்ளனர். இப்பிரச்னையைத்தீர்க்க உடனடியாக 4,000 தமிழ் ஆசிரியர்கள் நியமிக்கப்படவேண்டும். ஆசிரியர்களை நியமிப்பதற்கு அரசாங்கத்திடம் பணமில்லையென்ருல், கல்வி வெள்ளை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்பக் கல்வித் திட்டத்திற்கு தேவையான தொழில் நுட்பக் கல்லூரிகளை எவ்வாறு நிறுவப்போகிருர்கள்

ஒவ்வொரு மாணவருக்கும் தாய்மொழி போதனுமொழியென்று கல்விவெள்ளை அறிக்கையில் தெளிவாகக் கூறப்படவேண்டும். முதல்மொழி என்று கூறப்பட்டிருப்பது ஒரு மயக்கமான நிலையைத் தருகிறது. இதனை மாற்றி தாய்மொழி என்று கூறவேண்டும்.

''கொத்தணிப்பாடசாலைகள் திட்டத்திலும் மயக்கமான நிலையுண்டு. சிங்கள, தமிழ்ப்பாடசாலைகளை ஒன்ருக கொத்தணி முறையில் சேர்க்காது தனித்தியங்கவிடவேண்டும்.

''கல்வி வெள்ளை அறிக்கையில் பின்தங்கிய பாடசாலைகள் பற்றி ஒரேயொரு பந்தி மட்டும் தான் கூறப்பட்டுள்ளது. இதனுல் பின்தங்கிய பாடசாலைகள் மேலும் புறக்கணிக்கப்படக் கூடிய ஒருநிலையுண்டு.

''கல்விவெள்ளை அறிக்கையில் ஆங்கிலம் இரண்டாவது கட்டாய பாடமாக இருப்பதை வரவேற்கிருேம். பல்கலைக்கழக அனுமதி பெறுவதற்கு ஆங்கிலம் கட்டாய பாடமென்பதை முற்ருக நீக்கவேண்டும் அவ்வாறு நீக்காவிட்டால் பின்தங்கிய பகுதிகளிலுள்ள மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறும் வாய்ப்பை இழந்துவிடுவார்கள்.

''நாட்டினுடைய கல்வி கொள்கையில் மாற்றம் கொண்டுவரப்படவேண்டியது அவசியமானது. இந்த கல்வி மாற்றத்தை அவதானத்துடன் செய்ய வேண்டும். அரசாங்க பாடசாலைகளைவிட தனியார் ரியூட்டரிகளில் கல்வி பயிலும் மாணவர்கள் தான் பரீட்சைகளில் பெருமளவில் சித்தியடைகின்றனர்'' என்ருர். (ம—வெ)

## பஸ்ஸில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தினர்.

இம்மாதம் 18ந் திகதி இரவு 10 மணிக்கு மண்டைதீவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பஸ்ஸினுல் சத்திரத்துச் சந்தியடியில் இறந்தவர் மோதப்பட்டதாகவும், அங்கு நின்றவர்கள் அதே பஸ்ஸில் அவரை ஏற்றிவிட்டதாகவும், பஸ்நிலையத்தில் நின்ற மற்றெருரு பஸ்ஸில் அவரை ஏற்றிவிட்டு, பஸ் சாரதியும், நடத்துநரும் சென்றுவிட்டதாகவும் மரண விசாரணையித் தெரிவிக்கப்பட்டது.

மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் மற்றெருரு சந்தேர்நபரான சாரதி சண்முகரத்தினத்தைக் கைதுசெய்யுமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டு, விபத்து மரணமெனத் தீர்ப்பளித்தார். (மா)


## மரண அறிவித்தல்

### சங்கரப்பிள்ளை நல்லதம்பி

காரைநகர் இடைப்பிட்டியைச் சேர்ந்த முன்னுள் அரசாங்க ஒப்பந்தகாரர் சங்கரப்பிள்ளை நல்லதம்பி காலமானுர். இவர் பொன்னம்மாவின் அன்புக் கணவரும், புவனேஸ்வரி, அரசாங்க ஒப்பந்தகாரர் நடராசா, காலஞ்சென்ற வைத்திலிங்கம் ஆகியோரின் அன்புத்தந்தையும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், கண்ணம்மா ஆகியோரின் அன்பு மாமனுரும், சம்புகுமாரன், பிரபாகரன், நந்தகுமார் ஆகியோரின் அருமைப் பேரனும், தில்லையம்பலம், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்,

அன்னுரின் ஈமக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை (22—01—82) காலை 10 மணியளவில் காரைநகர் சாம்பலோடை மயானத்தில் நடைபெறும்.

2049


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாடு'' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 303 ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 வு ஜனவரி மீ 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as NewsPaper. The General P.O..Sri Lanka Regd. Q.B.100236/81. P.O. Box 49, Jaffna. தொலைபேசி: 7707, 389, 8126.